
# திருக்கோயில்



ஜூன்
2002

விலை
ரூபாய் ஐந்து





திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் 23.3.2002 அன்று மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமிகு கே. சுதர்சனம் அவர்கள் அன்னதானத் திட்டத்தைத் துவக்கிவைத்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி / தககார் திருமிகு மு.க. பாலசுப்பிரமணியன், பி.ஏ., பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

மாலை 44    திருவள்ளுவர் ஆண்டு 2033    சித்ரபானு - ஆனி ஜூன் 2002    மணி 6



சிறப்பாசிரியர்

திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


## முகப்பு

**திருவண்ணாமலை அருள்மிகு உண்ணாமுலை உடனாகிய அருணாசலேசுவரப் பெருமான்.**

## பொருளடக்கம்


திருவண்ணாமலை திருத்தலச் சிறப்பு - ஆலய வெளியீடு

பாம்பன் சுவாமிகள் வாழ்வில் நடைபெற்ற
சில அற்புதங்கள் - முனைவர் த. அமிர்தலிங்கம்

திருவண்ணாமலையும் திருஞானசம்பந்தரும்
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

சரபேஸ்வரர் - திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

சேலம் குகை அருள்மிகு காளியம்மன், மாரியம்மன்,
முனியப்பன் திருக்கோயில்களின் வரலாறு
- ஆலய வெளியீடு

அறக்கருணையும், மறக்கருணையும் - சேது. சிவா

அமிர்தானந்தம் - சிறுகதைச் சித்தர் ஏ.வி. ராஜகோபால்

அரவு அளித்த தீர்ப்பு - புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ. பி.எட்.

கூரநாராயண ஜீயர் - திருமதி இந்திரா ஆராஅமுதன்

அன்னதானதிட்டம் வெல்க வெல்கவே!
- முனைவர் இரா. செல்வகணபதி



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
*திருக்கோயில்*
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : 8279407

# திருவண்ணாமலைத் தலச்சிறப்பு

**- ஆலய வெளியீடு**

உண்ணாமுலை உமையொளொடும்
உடன் ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே

- திருஞானசம்பந்தர்

சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடைப்பட்ட நாட்டை நடுநாடு என வழங்கினர் முன்னோர். இந்நாடு இன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும்பகுதியையும், வடார்க்காடு மாவட்டத்தின் சிறுபகுதியையும் தன்னுடையதாகக் கொண்டதாகும். தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற நடுநாட்டுத் தலங்கள் இருபத்திரண்டனுள் திருவண்ணா மலை இருபத்திரண்டாவதாக எண்ணப்பெறும். இத் தலம் திருவண்ணாமலை மாவட்டத்தின் தலைநக ராகும்.

விழுப்புரம் - காட்பாடி இருப்புப்பாதையில் திருவண்ணாமலை புகைவண்டி நிலையம் உள்ளது. புகைவண்டி நிலையத்திலிருந்து அண்ணாமலையார் திருக்கோயில் 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.

திருவண்ணாமலை செல்ல பேருந்துகள் பல நகரங்களிலிருந்தும் உள்ளன.

திருவண்ணாமலை பெரிய யாத்திரைத் தலம். சிறப்புநிலை நகராட்சியின் நிர்வாகத்திலுள்ள பெரிய நகரம். கடைவீதிகள், தங்கும் விடுதிகள் முதலிய வசதி களை உடையஊர்.

## 1. தலப் பெருமை:

சமய உலகில் புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றா லும் சிறந்த இத்தலம் விராட புருடனுக்கு மணிபூரக மாகவும், பஞ்சபூதத் தலங்களில் தேயுத் தலமாகவும் விளங்குவது, முத்தித் தலங்கள் நான்கினுள் நினைக்க முத்தி தருவது. ஞானத் தபோதனர்கள் வாழ்ந்து வரும் பெருமையுடையது. இம் மலையையே எட்டா மலை என்ற பொருளில் அண்ணாமலை என வழங்குகிறோம். இம்மலைப் பெயரே ஊர்ப் பெயராகவும் விளங்கி வரு கிறது. திருமாலும் பிரம்மாவும் தாமே பிரமம் என்று எண்ணிய தருக்கொழிந்து தம்மை வழிபட விரும்பிய போது இறைவன் சிவலிங்கத் திருவுருவில் வெளிப் பட்டருளிய சிறப்புடையது. மகா சிவராத்திரியில் இலிங்கோத்பவ காலத்தில் சைவ மெய்யன்பர்கள் பலரும் திருவண்ணாமலையை நினைந்து வழி படுவர். சிவபெருமான் உமையம்மையாருக்கு இடப் பாகம் அளித்த சிறப்பும் இத்தலத்திற்குண்டு.

திருக்கார்த்திகைப் பெருவிழா இத்தலத்தின் தனிச்சிறப்பான திருவிழாவாகும். அண்ணாமலை யாருக்கு அரோகரா என்று அண்ணாமலை இறைவனை நினைந்துவழிபடாதவர் இல்லை எனலாம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய ஐந்து தேவாரத் திருப்பதிகங்களும் சுந்தரர், மணிவாசகர், அருணகிரிநாதர் முதலியோர் அருளிய தனிப் பாடல்கள், பதிகங்கள், திருப்புகழ்கள் முதலியனவும் இத்தலத் திற்குள்ளன.


சூரியன், சந்திரன், பிரதத்தராசன், அஷ்ட வசுக் கள், பிரமதேவன், திருமால், புளகாதிபன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது.

தமிழக மன்னர்கள் பலரும் செய்த திருப் பணிகளைப் பெற்றுப் புகழ்பெற்ற திருக்கோயிலாகத் திருவண்ணாமலை விளங்கிவருகிறது.

நாள்தோறும் வடஇந்திய தென்னிந்திய மக்கள் பலரும் யாத்திரையாக வந்து வழிபடும் சிறப்பை இத்தலம் பெற்றுப் பெருமை பெற விளங்குகிறது.

## 2. தலப் பெயர்கள்:

திருமாலுக்கும் பிரம்மாவிற்கும் அடிமுடி எட்டாத நிலையில் இறைவன் மலை உருவில் தோன்றி யது ஆதலின் அண்ணாமலை எனப் பெறுகிறது. அண்ணாமலை என்றாயிற்று எனவும் கூறுவர். அழல் உருவாய் இறைவன் வெளிப்பட்ட மலை என்னும் பொருளில் அருணாசலம் சோணாசலம் என்ற பெயர்கள் வடமொழியில் வழங்குகின்றன. முத்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், சுத்த நகரம், கௌரி நகரம், சோணகிரி,



சோணாத்திரி, அருணகிரி, அருணாத்திரி, அருணை முதலிய பெயர்களும் இத்தலத்திற்குள்ளன.

### 3. கோயில் அமைப்பு:

தமிழகத்தில் விளங்கும் பெரிய திருக்கோயில்களில் ஒன்று திருவண்ணாமலை. 24 ஏக்கர் பரப்பில் ஆறு பிரகாரங்களுடனும் ஒன்பது ராஜகோபுரங்களுடனும் மலையடிவாரத்தில் கிழக்கு நோக்கி அழகுற அமைந்துள்ளது. சுவாமிக்கு இடது பாகத்தில் அம்பாள் கோயில் கிழக்கு நோக்கி விளங்குகிறது. ஐந்தாம் பிரகாரத்து வெளித்திருமதில் மிக்க அகலமும் உயரமும் உடையது. தெற்கு, வடக்கு மேற்கு வாயில்களில் இரண்டிரண்டு கோபுரங்களும், கீழ்புறம் சுவாமி சன்னதியில் மூன்று கோபுரங்களுமாக ஒன்பது இராஜகோபுரங்கள் உள்ளன.

கிழைக்கோபுரம் பெரியது. 11 நிலைகளுடன் 217 அடி உயரமும் உடையதாய் இருக்கிறது. இக் கோபுரம் தென்னிந்தியாவிலேயே மிக உயரமான கோபுரமாகும். தெற்கு கோபுரத்தை திருமஞ்சனக் கோபுரம் என்றும், மேற்குக் கோபுரத்தை பேய்க் கோபுரம் என்றும், வடக்குக் கோபுரத்தை அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் கூறுவர்.

கிழக்கு இராஜகோபுர வாயில் வழியாக உள்ளே சென்ற உடன் வலதுபக்கத்தில் ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. இங்கு பாதாளலிங்கேசர் கோயில் உள்ளது. ரமண முனிவர் பலகாலம் தங்கித் தவம் செய்த இடம். இடது பக்கம் கம்பத்து இளையனார் திருக் கோயில் உள்ளது. இங்குள்ள முருகன் அருணகிரிநாதர் பிரார்த்தனைக்கிரங்கிப் பிரபுட தேவமகாராயருக்குக் காட்சி கொடுத்தவராவார். இச்சன்னதியின் தென்புறமாக நான்கு புறங்களிலும் திருமாளிகைப் பத்தி உடைய தாய்ச் சிவகங்கைத் தீர்த்தம் விளங்குகிறது. சிவகங்கைத் திருக்குளத்தின் வடமேற்கில் சர்வசித்தி வினாயகர் கோயில் உள்ளது. இங்கு விநாயகரை வழிபட்டுப் பெரிய நந்திகேசுரரைத் தரிசித்து இரண்டாம் கோபுர வாயிலை அடைவோம்.

இரண்டாம் கோபுரம் வல்லாள மகாராஜா கோபுரம் எனப்படும். அருணகிரிநாதர் இக்கோபுரத்தின் மீதேறித் தமது ஊனுடலை நீக்கிக் கொள்ளக் கீழே விழுந்தபோது அவரைக் காப்பாற்றி அருள் செய்த முருகப்பெருமான் கோபுரவாயிலில் விளங்குகிறார்.

முருகப்பெருமான் சந்நிதியில் அருணகிரிநாதர் திருவுருவம் உள்ளது. கோபுரத்தின் தென்பால் கல்யாண சுந்தரேசுரர் சந்நிதி உள்ளது.

கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் வலதுபுறம் சக்திவிலாசசபாமண்டபத்தைக் காணலாம். கோபுரத்தின் தென்பால் காலபைரவர் சந்நிதி உள்ளது. அருகில் பிரமதீர்த்தம் உள்ளது. அடுத்து விளங்கும்

மூன்றாம் கோபுரம் கிளிக்கோபுரம் எனப்படும். அருண கிரிநாதர் கிளி வடிவத்தோடு பாரிசாத மலர் கொண்டு வந்தபோது உடலைக் காணாமல் கிளி உருவத்தோடு இருந்து கந்தரனுபூதி பாடிய கோபுரம் இது. கிளி உருவம் கோபுரத்தில் உள்ளது.

கிளிக்கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மூன்றாம் பிரகாரத்தில் பதினாறுகால் மண்டபம் உள்ளது. இங்குதான் திருக்கார்த்திகை நாளில் பஞ்ச மூர்த்திகள் மலையை நோக்கி நிற்க மலைமீது தீப மேற்றும் விழா நடைபெறும். பல்லாயிரக்கணக்கான மக்கள் சுவாமியையும் தீபத்தையும் ஒரே நேரத்தில் தரிசிக்கும் இடமிது. அடுத்த வாயிலில் கொடிமரம் பரணிதீபம் வைக்கும் தீபஸ்தம்பம் ஆகியன இருக்கின்றன. பிரகாரத்தை வலம் வரும் போது முதலில் சம்பந்த விநாயகரைத் தரிசிக்கலாம். தெற்குப் பிரகாரத்தில் தலமரமான மகிழமரம் உள்ளது. அடுத்து திருக் கல்யாண மண்டபம் உள்ளது. மேற்கே அருணகிரி யோகீஸ்வரர் சந்நிதியும் வடக்கே அம்பாள் சந்நிதியும் கோயில் செல்லும் வழியும் கிழக்கே காளத்திலிங்கேசுரர் சந்நிதியும், கோயில் நிர்வாக அலுவலகமும் கிழக்கே பழனியாண்டவர் ஏகாம்பரேசுரர் சந்நிதிகளும் உள்ளன. இப்பிரகாரத்தின் உள்மதில்களில் பல கல்வெட்டுக் களும், புடைப்புச் சிற்பங்களும் உள்ளன. குன்றக்குடி ஆதின ஆதிகுரு முதல்வர் வரலாற்றுப் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

நான்காவது வாயிலைக் கடந்து அதிகார நந்திகேசுவரரை வழிபட்டு உள்ளே சென்றால் இரண்டாம் பிகராரம் வரும். இப்பிரகாரத்தில் சிவாலயத்தில் அமைய வேண்டிய அனைத்துப் பரிவார தெய்வங் களின் சந்நிதிகளும் உள்ளன. தெற்கே அறுபத்து மூவர் திருவுருவங்கள் உள்ளன. மேற்கே சோமாஸ்கந்தர், வேணுகோபாலர், ஆறுமுகர், கஜலட்சுமி சந்நிதிகள் உள்ளனர். வடக்குப் பிரகாரத்தில் அறுபத்து மூவரின் உற்சவர் உள்ளனர். திருப்பள்ளியறை, நடராசர் சந்நிதி யுள்ளன.

இவர்களை வழிபட்டு அண்ணாமலையார் சந்நிதிக்கு வருகிறோம். அர்த்தமண்டபம் அழகிய சலவைக்கல் திருப்பணியோடு தூய்மையாக உள்ளது. அருணாசலேசுவரர் அருளே திருமேனியாகச் சிவலிங்க வடிவில் காட்சி தருகிறார். நம்மை நாம் மறந்து அவ ருருளில் கலந்து வழிபடலாம்.

வழிபட்டு வெளியே வந்து முதற்பிரகாரமாகிய மேடையை வலம்வரும்போது கோஷ்டங்களில் தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே பிரம துர்க்கை, சண்டேசுவரரை வழிபடலாம்.

இரண்டாம் பிரகாரத்தின் வைகுந்த வாயிலின் வழியாக நவக்கிரக மூர்த்திகளை வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடையலாம்.

அம்பாள் சந்நிதியில் உள்ள மகாமண்டபத் தூண்களில் அஷ்டலஷ்மிகள், ருத்ரதுர்க்கை முதலிய சிற்பங்கள் விளங்கும் மகாமண்டபம் காட்சி தருகிறது. கர்ப்பகிருகத்தைச் சுற்றிய பிரகாரத்தில் திருவெம் பாவைப் பாடல்கள், தலத்திருப்பதிகங்கள் ஆகிய கல்வெட்டுகள் விளங்குகின்றன.

கருவறையின் முன்னுள்ள அர்த்தமண்டபம் அழகிய சலவைக்கல் திருப்பணியோடு காட்சி தரு கிறது. அருள்மிகு உண்ணாமலையம்மை சின்னஞ் சிறிய திருவுருவுடன் அருட்காட்சி வழங்கி நம் உள் ளத்தில் இடம்பெறுதலைத் தரிசித்து உணரலாம்.

### 4. மூர்த்திகள்:

இத்தலத்தில் விளங்கும் தலவிநாயகருக்கு ஸ்ரீ சம்பந்த விநாயகர் என்று பெயர். இவர் செந்தூரம் அணிந்த திருமேனியோடு காட்சி தருகிறார். கயமுகா சுரனைக் கொன்று அவனது குருதியைத் தம்முடலில் இவர் பூசிக்கொண்டதாக வரலாறு. சுவாமி பெயர் ஸ்ரீ அருணாசலேசுரர் என்பதாகும். அண்ணாமலையார் உடையார் எனவும், திருவண்ணாமலை ஆண்டார், மகாதேவர், ஆள்வார், அண்ணாநாட்டுடையார் என வும் தல புராணங்களிலும் கல்வெட்டுகளிலும் கூறப் படுகின்றன. அம்பாள் பெயர் ஸ்ரீ அபீத குசாம்பாள், உண்ணாமுலையம்மை, உண்ணாமுலை நாச்சியார், திருக்காமக்கோட்டமுடைய நம்பிராட்டியார், உல குடைய பெருமாள் நம்பிராட்டியார் என்பன தேவார இலக்கியங்கள் கல்வெட்டுகளில் காணப்பெறும் பெயர் களாகும்.

இத்தலத்து முருகப்பெருமான் சிறப்புடைய மூர்த்தி ஆவார். தீர்த்தம் - பிரமதீர்த்தம், சிவகங்கை தீர்த்தம், சோனைநதியாகியனவாகும். தலமரம் - மகிழ மரம் (வகுளம்).

## புராண வரலாறுகள்

### 5. அடிமுடி தேடிய வரலாறு:

படைத்தற் கடவுளாகிய நான்முகனும், காத்தற் கடவுளாகிய திருமாலும் தமக்குள் யார் பெரியவர் என்பதில் போட்டியிட்டனர். சிவபிரான் அவர் களிடையே ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாய்த் தோன்றி தமது அடியையோ முடியையோ காணுகிறவர் யாரோ அவரே பெரியவர் எனக் கூறி ஓங்கி

உயர்ந்து நின்றார். அவரது திருவடிகள் பாதாளம் ஏழினுக்கும் கீழே சென்றது. திருமுடி அண்ட முகடு களைப் பிளந்து உயர்ந்து சென்றது. திருமால் வராக அவதாரம் எடுத்துத் திருவடிகளைக் காணச்சென்றார். நான்முகன் அன்னமா வடிவெடுத்துப் பறந்து சென்று திருமுடியைக் காணச் சென்றார். முடிவில் இருவரும் அடியையோ முடியையோ காண இயலாது தமது அகங்காரம் அழியப்பெற்றவராய்ச் சிவபரம்பொருளே உலகில் முழுமுதற் பரம்பொருள் என்பதனை உணர்ந்து தம்பிழை பொறுத்தருளுமாறு அப்பெரு மானைப் பிரார்த்தித்தனர். பெருமாள் சிவலிங்கத் திரு வுருவத்தோடு அச்சோதிப் பிழம்பினின்று வெளிப்பட் டார். திருமால் பிரமா இருவரும் அப்பெருமானை வழிபட்டு உண்மை ஞானம் பெற்றனர். சோதிப் பிழம்பு அருணாசல மாயிற்று. அதினின்று தோன்றிய சிவலிங்கம் அருணாசலேசுவரானார். இவ்வரலாற்றை இம்முறையில் கூறும் வெண்பா அறிதற்குரியது.

ஆதி நெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிப் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை - வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணா மலை

என்பதாகும்.

இவ்வரலாறு திருமுறைகளில் பல இடங் களிலும் பயின்று வருதலைக் காணலாம். திருஞான சம்பந்தர்தாம் அருளிய தேவாரத் திருப்பதிகந்தோறும் ஒன்பதாவது திருப்பாடலில் இவ்வரலாற்றைக் குறித்துத் திருப்பாடல்களை அருளியுள்ளார். இத்தலத் தேவாரத் திருப்பதிகங்களில்

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில் புகழோனும்
அளவா வணம் அழலாகிய அண்ணாமலை
அண்ணல்
தளராமுலை முறுவல் உமைதலை வன்அடி சரணே.

எனவும்.

''தேடிக்காணோர் திருமால் பிரமர் தேவர் பெரு மானை'' எனவும் குறித்தருள்கிறார். திருநாவுக்கரசர் இலிங்கப்புராணத் திருக்குறுந்தொகையில் பாடல் கள்தோறும் இவ்வரலாற்றை விரித்தருள்கின்றார். சுந்தரர் இத்தலத்திற்கு எழுந்தருளித் திருப்பதிகம் அருளிச் செய்து அடிமுடி தேடிய இத்தல வரலாற்றை

மாவாய் பிளந்தானும் மலர்மா மிசையானும்
ஆவாஅவர் தேடித் திரிந்தே அலமந்தார்

எனவும்

பண்டைய மால்பிரமன் பறந்தும் இடந்தும் அயர்ந்தும்
கண்டிலராய் அவர்கள் கழல் காண்பரிதாய பிரான்

எனவும், பிறவாறும் குறித்தலைக் காணலாம்.

திருவண்ணாமலை கிருதயுகத்தில் அக்னி மலையாகவும், திரேதயுகத்தில் மாணிக்கமலை யாகவும், துவாபரயுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறின எனப் புராணம் கூறும். நிலநூல் இம்மலை நெருப்பினால் தோன்றியது என்று குறிப்பிடுகிறது.


## 6. தேவி இடப்பாகம் பெற்றது :

திருக்கயிலை மால்வரையில் சிவ பரம்பொரு ளோடு உடனுறையும் உமையம்மையார் விளையாட் டாகப் பெருமான் திருக்கண்களைத் தமது திருக்கரத் தால் பொத்தினார். சூரிய சந்திரர்களாகவும், அக்னி யாகவும் உள்ள அக்கண்களை இறைவியார் பொத்திய தால் உலகமெங்கும் இருள் சூழ்ந்தது. அம்பிகை அஞ்சிக் கையை அகற்றினார். உலகம் ஒளிமய மாயிற்று. ஆயினும் அம்பிகை பொத்திய ஒருகணம் உலகிற்கு ஒரு ஊழிக்காலமாதலின் உயிர்கள் அனைத் தும் அந்நேரத்தில் துன்பத்துக்கு ஆளாயின. அப் பாவத்தைப் போக்கிகொள்ள விரும்பிய அம்பிகை காஞ்சிபுரம் அடைந்து சிவப் பரம்பொருளைப் பூசித் தார். இறைவன் வெளிப்பட்டு அம்பிகையை நோக்கித் திருவருணையை அடைந்து தவமியற்றித் தமது இடப் பாகத்தைப் பெறுமாறு அருளிச் செய்தார்.

பார்வதி தேவியார் அவ்வண்ணமே அண்ணா மலையை அடைந்து பவழக்குன்று மலையில் பர்ண சாலை அமைத்துக் கௌதம முனிவர் உதவியோடு கடும் தவம் புரிந்துவந்தார். கார்த்திகைப்பரணி நாளில் பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதியுருவத் தரிசனம் கண்டு எம்பெருமானின் இடப்பாகத்தைப் பெற்றருளி னார். சிவபிரான் உண்ணாமுலை உமையாளோடும் உடனாகிய ஒருவரானார்.

## 7. திருக்கார்த்திகைத் தீபதரிசனம்:

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபவிழா உலகறிந்த பெருவிழாவாக நிகழ்கின்றது. இக் கோயிலின் பிரம்மோற்சவம் இவ்விழாவையொட்டியே கார்த்திகைத் தீபத்தைப் பத்துநாளாகக் கொண்டு நடை பெறுகிறது. தீபதரிசனத்தன்று உதயகாலத்தில் பரணி தீபமும், மாலை பிரதோஷக் காலத்தில் அர்த்த நாரீசுவரர் எழுந்தருளிக் காட்சிக் கொடுத்தலும் அவ்வேளையில் மலையின் உச்சியில் பெருமான் ஜோதி ஸ்வரூபம் காட்டலும், அதே சமயத்தில் ஆலயத்தின் பஞ்சமூர்த்தி களுக்குத் தீபாராதனை நிகழ்தலும் நடைபெறுகின்றன.



கார்த்திகை தீபம் உமையம்மை இத்தலத்தில் நடத்திய பெருவிழா எனவும், அம்பிகைக்கு இறைவன் தீபத் திருநாளன்று சோதி உருவாக மலைமீது காட்சி தந்து அவருக்குத்தம் இடபாகம் அளித்த திருநாள் எனவும் தலபுராணம் கூறுகிறது.

கார்த்திகைக்கு கார்த்திகை நாள் ஒருசோதி
மலைமீது காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர்காணில் பசிப்பிணியில்
லாதுலகில் மன்னிவாழ்வார்
பார்த்தி பர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிருமது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தின் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்

என்பது தலபுராணம்.

புத்திதரும் தீபம்நல்ல புத்திரசம் பத்துமுண்டாம்
சித்திதரும் தீபம் சிவதீபம் - சக்திக்கு
உயிராகும் சோணமலை ஓங்கிவளர் ஞானப்
பயிராகும் கார்த்திகை தீபம்.

என்பது கார்த்திகை தீபவெண்பா.

பெரிய செப்புக் கொப்பரை ஒன்றில் நெய், துணி கற்பூரம் ஆகியவற்றைக் கொண்டு மலையுச்சி யில் இத்தீபம் ஏற்றப்படுகிறது. அன்பர்கள் பலரும் இத்தீபத்திற்கு வேண்டிய பொருள்களைக் காணிக்கை யாகத் தந்து அருள்பெறுகின்றனர். தீபத்திருநாளன்று திருவண்ணாமலைத் திருக்கோயில் ஒளிவெள்ளத்தில் திகழும். கோபுரங்கள் மற்றும் எல்லா சந்நிதிகளிலும் திருவிளக்குகள் ஏற்றி வைக்கப்பெறும். பதினாறு கால் மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி அருட்காட்சி தர நிகழும். இவ்விழாவிற்கு இந்திய நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல லட்சம் மக்கள் திருவண்ணா மலைக்குத் திரண்டு வந்து வழிபடுவதைக் காணலாம்.

இலக்கியங்களில் இவ்விழாவின் பழமையை அறியலாம். 'குன்றின்மேல் இட்ட விளக்கு' என்பது நம் நாட்டுப் பழமொழி. 'குன்றத்து உச்சிச்சுடர்' என்று சிந்தாமணியும், 'நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள் விளக்கு' எனக் கார்நாற்பதும் 'மதிநிறைந்து அறுமீன் சேறும் அகல் இருள் நெடுநாள் மருகு விளக் குறுத்து மாலை தூக்கிய பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவு' என்று அகநானூறும் கூறும். தொல் காப்பியத்துள் வரும் விளக்குநிலை என்பதற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு என்று உரை வகுக் கிறார். தொல்கார்த்திகை நாள் விளக்கிடு பற்றித் திரு ஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகத்தில் குறித்தருள் கிறார்.

## 8. திருமலை வலம்வருதல்:

திருவண்ணாமலையில் சிவபெருமான் சோதிப் பிழம்பாய்த் தோன்றிய வடிவமே இங்கு மலையாக உள்ளது. மலையே சிவபிரானாக இத்தலத்தில் விளங்குவதால் இத்தலத்தில் மலைவலம் வருதல் மிக்க புண்ணியத்தைத் தருவதாகும். இம்மலையின் திருச்சுற்று 10 கிலோமீட்டர் தூரமுடையது.

இம்மலையை வலம் வருவோர் ஆதிவாரத்தில் சிவபதமும், சோமவாரத்தில் இந்திரவாழ்வும், மங்கள வாரத்தில் பிறவிப்பிணி நீக்கமும், புதவாரத்தில் தேவ ராகும் தகுதியும், குருவாரத்தில் பதவியும், சுக்கிர வாரத்தில் விஷ்ணு பதவியும், சனிவாரத்தில் நவக்கிரக தோஷநிவர்த்தியும் பெறுவர். சிவராத்திரி வருடப் பிறப்பு, ஐப்பசி மாதங்களில் வலம் வருதல் மிக விசேடம்.

மலையைச் சுற்றி எண்திசைகளிலும் அஷ்ட லிங்கங்கள், அஷ்டநந்திகள், தீர்த்தங்கள் பலவும் பல மண்டபங்களும் ஆஸ்ரமங்களும் உள்ளன.

மலையின் அடிவாரத்தில் சேஷாத்திரி சுவாமிகள் சமாதி, ரமணாச்சிரமம், ஆதி அண்ணாமலையார் ஆலயம் முதலியனவும், தீர்த்தங்கள் பலவும் உள்ளன.

மலையின் இடைப்பகுதியில் கந்தாச்சிரமம், குகைகள், பாததீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன. கார்த்திகை, தை மாதங்களில் பெருமான் கிரிவலம் வருவார்.

விருபாக்ஷதேவர், ஈசான்யதேசிகர், சோஷாத்ரி சுவாமிகள், ரமண முனிவர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். மலையின் நடுப்பகுதியிலும் அடிவாரத் திலும் குகைகள், ஆசிரமங்கள், தீர்த்தங்கள் நிறைய உள்ளன.

## 9. வழிபட்டோர்:

முருகப் பெருமான் திருக்கயிலையங்கிரியி லிருந்து சூரனை அழித்தற்குத் தெற்கு நோக்கி வரும் காலத்தில் திருவண்ணாமலையை வழிபட்ட வர லாற்றை கந்தபுராணத்தில் காணலாம்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளித் தங்கி இருந்து அண்ணாமலையாரை வழிபட்டு இரண்டு திருப்பதிகங்கள் அருளியுள்ளார்.

திருநாவுக்கரசரும் அவ்வாறே இத்தலத்தை வழிபட்டு அருளிய திருப்பதிகங்கள் மூன்றாகும். சுந்தரர், நக்கீரர், கபிலர், பட்டினத்தார் முதலியோர் இத்தலத்தைத் தம் பாடல்களில் குறிப்பிட் டுள்ளனர்.

வச்சிராங்கதபாண்டியன் குதிரை மீதேறி வேட்டை யாடி வரும்போது புனுகு பூனையொன்றைத் துரத்திவர அப்பூனை அண்ணாமலையை வலம் வந்து வீழ்ந்து இறந்தது. பாண்டியரின் குதிரையும் உட னிறந்தது. இறந்த குதிரையும் புனுகு பூனையும் வித்யா தரர்களாக மாறி துர்வாச முனிவர் சாபத்தினால் தமக்கு அப்பிறவி ஏற்பட்டதையும் அண்ணாமலையை வலம் வந்ததால் சாபநீக்க அடைந்ததையும் கூறக்கேட்ட பாண்டியன்தன் மகனிடம் அரசுரிமையைத் தந்து விட்டு அண்ணாமலையை அடைந்து வலம் வந்து திருப்பணி கள் செய்தும் தேவேந்திரன் ஆனான்.

வல்லாள மகராசன் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன்; சிறந்த சிவ பக்தனாக இம்மன்னன் விளங்கினான். இரப்போர்க்கு இல்லையெனாத விரதத்துடனும் அறநெறி வழுவா மலும் ஆட்சி புரிந்த இம்மன்னனிடம் அண்ணாமலை யண்ணலும் ஒருநாள் அடியவர் வடிவுடன் அவனது அரண்மனைக்கு எழுந்தருளினார்.

அடியவராக வந்த பெருமான் தாம் மகிழ்வுடன் துயில ஒரு கன்னியைத் தமக்குத் தருமாறு கேட்டார். அரசன் பெண்களில் ஒருவரை தருவிக்குமாறு பணித் தனன். யாரும் கிடைக்காத நிலையில் அரசனது இளைய ராணி சல்லமாதேவி தம் கணவர் வாக்கைக் காக்கத் துணிந்து அடியவருடன் துயில்கொள்ள முற்பட்டார். அரசமாதேவி அடியவர் அருகில் சென்று அவரைத் தீண்டியவுடன் வந்த பெருமான் குழந்தையானார். அரசனும் அரசியும் தமக்குப் பிள்ளையில்லாக் குறை நீக்கப் பெருமானே வந்துள்ளார் என மகிழ்ந்தபோது குழந்தை மறைந்தது. பெருமான் வல்லாள மகராசரின் பக்திக்கும், கொண்ட விரதத்தைக் காப்பாற்றத் துணிந்த மனஉறுதிக்கும் மகிழ்ந்து அவர்கட்கு சிவலோகம் வழங்கி அருள் புரிந்தார். மேலும் ஈமக்கடனுக்கு பிள்ளை யில்லையே என்ற மனக்குறை வேண்டாம். உங்கட்கு உத்தரகிரியை புரிவோம் என்றருளி மறைந்தார்.

மாசி மகத்தில் வல்லாள மகராசருக்குப் பெருமான் உத்தரகிரியை இயற்றும் ஐதீகவிழா இத்தலத்தில் நிகழ்கிறது.

அருணகிரிநாதர் கந்தக்கடவுளருள் பெற்று திருப் புகழ் கந்தரனுபூதி அலங்காரம் அந்தாதி திருவகுப்பு முதலியன அருளியவர். திருவண்ணாமலையில் அவ தரித்தவர், வாழ்க்கையில் சலிப்பெய்தித் திருவண்ணா

மலைக் கோயிலின் இரண்டாம் கோபுரத்தின் மீதேறிக் கீழே விழுந்தபோது முருகப் பெருமான் இவரைக் காப்பாற்றி ஆட்கொண்டருளித் தம்மைப் பாடும் பணியை செய்துவரக் கட்டளையிட்டருளினார்.

திருவண்ணாமலையில் அரசு புரிந்த பிரபுட தேவமகாராயர் காலத்தில் அரசவைக் கவிஞராக இருந்த சம்மந்தாண்டான் என்னும் தேவி உபாசகருடன் வாதிட்டு வென்றவர். முருகன் 'முத்தைத் தரு' என அடியெடுத்துக் கொடுத்து இவருக்கு தீட்சை செய்தருளினார் என்பது வரலாறு. சமய குரவரைப் பின்பற்றித் தலங்கள் தோறும் சென்று முருகப் பெருமான் மீது இவர் பாடியருளிய திருப்புகழ் சந்தக் கவியமைப்புக்கும் முருகப்பெருமான் மீது அன்பர்கள் பக்திகொள்வதற்கும் உரிய சிறந்த நூலாகும். அருணகிரிநாதர் திருவண்ணாமலை முருகப் பெருமானுக்கு 78 திருப்புகழ்ப் பாடல்களை பாடி யுள்ளார்.

திருமுறை உலகில் பண்ணிசை வாணர்கள் திருமுறைகளை ஓதியபின் இவர் அருளிய திருப்புகழ் பாடி நிறைவு செய்வதைக் காணலாம்.

குகைநமசிவாயர் சில நூற்றாண்டுகளுக்கு முன் திருவண்ணாமலை குகையில் வாழ்ந்தவர், சிறந்த சித்திகள் பெற்றவர். இவருடைய சீடர் குருநமசிவாயர். இருவரும் ஞானக்கண்ணால் பல காட்சிகளைக் காணும் பேறு பெற்றவர்கள்.

ஈசானிய ஞானதேசிகர் இத்தலத்தில் திருமடம் நிறுவிய பெரியார், இவர் திருமடம் ஈசானிய மடம் என வழங்குகிறது.

ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் திருவண்ணா மலை ஆதீனத்தின் முதல் குரவர். இவர் தம் வரலாற்றுச் சிற்பங்கள் ஆலயத்தில் உள்ளன. திருவண்ணாமலை ஆதீனம் இப்போது குன்றக்குடியில் உள்ளது.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமி கள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சேஷாத்ரி சுவாமிகள் முதலியோர் திருவண்ணாமலைத் தலத் தில் மிக்க ஈடுபாடுடைய ஞானிகளாவர்.

ரமண முனிவர் இத்தலத்தில் அண்மைக் காலத் தில் வாழ்ந்த அருளாளர். இவர் ஞானம் பெற்ற பாதாள லிங்கக் குகை ஆலயத்துள் இருக்கிறது. யோகிராம் சரத் குமார் சுவாமிகள் திருவண்ணாமலையில் தங்கிப் பலருக்கும் நல்லன தந்தருளி மறைந்தார்.

## பெரியது எது?

தொண்டர் தம் பெருமை

சொல்லவும்

பெரிதே!

— ஔவையார்

*10. முத்தித்தலங்கள் :*

தருமையாதீன ஆதி பரமாசாரியார் ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் முத்தித்தலங்கள் அனைத்தை யும் தொகுத்தருளிய சிவபோகசார வெண்பாவில் இத்தலத்தை குறிப்பிட்டருளி உள்ளார்கள்.

''தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லை வனம் கூடல் முதுகுன்றம் - நெல்லை களர்
காஞ்சிகழுக்குன்றம்மறைக் காடு அருணை
காளத்தி
வாஞ்சியம் என முத்தி வரும்''

*11. திருவிழாக்கள் :*

அண்ணாமலையாருக்கு நடைபெறும் நாள் வழிபாடுகளும் சிறப்பு வழிபாடுகளும் மிக்க பெருமை உடையன.

ஆறுகால நித்திய பூஜைகளோடு அமாவாசை, கார்த்திகை, பிரதோஷம், சுக்கிரவாரம், சோமவாரம் ஆகிய பஞ்ச பருவ உற்சவங்கள் நிகழ்கின்றன.

சித்திரைப் பருவவிழா, வைகாசிவிசாகம் ஆனித் தட்சிணாயன விழா, ஆனித்திருமஞ்சனம் ஆடிப்பூரம், ஆகஸ்டு 15-ல் அருணகிரிநாதர் விழா, ஆவணிமூலம், விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி கந்தசஷ்டி, கார்த்திகைச் சோமவார சங்காபிஷேகம், திருக்கார்த்திகைப் பெருவிழா, மார்கழி உத்தராயானம், தைத்திருவூடல், மாசிமகம் வல்லாளன் விழா, சிவ ராத்திரி, பங்குனி உத்திரம் திருக்கல்யாணம், போன்ற சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன.

★★★

# பாம்பன் சுவாமிகள் வாழ்வில் நடைபெற்ற சில அற்புதங்கள்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

''எழும்போதும் வேலும் மயிலும் என்பேன்
எழுந்தே மகிழ்ந்து
தொழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
தொழுதே உருகி
அழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
அடியேன் சடலம்
விழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
செந்தில் வேலவனே''

என்று எந்நேரமும் - எந்த வேளையும் கந்த வேளை நினைந்து வாழ்ந்த அருளாளர் நம் பாம்பன் சுவாமிகள்.

முருகப் பெருமான் ஒருவரையே தம்முடைய முழுமுதற் கடவுளாக - குருவாகக் கொண்டு ''அவனருளால் அவன் தாள் வணங்கி'' என்று மாணிக்க வாசகர் கூறுவது போல் கந்தவேள் ஒருவரையே வந்தித்துச் சிந்தித்து 6666 பாடல்கள் புனைந்து மகிழ்ந்து அவற்றை ஆறு மண்டலங்களாக வகுத்தருளிய மகான் தாம் நம் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்.

''குருவாய் வருவாய்
அருள்வாய் குகனே''

என்று கந்தர் அனுபூதியில் பரிபக்குவம் கொண்டுள்ள உயிர்களுக்கு முருகனே குருவாக வந்து திருவருள் புரிவான் முருகப் பெருமான் என்று அருளியுள்ளார் அருணகிரிநாதர்

''தெளிவு குருவின் திரு மேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவின் குருவுரு சிந்தித்தல் தானே''
என்பது திருமந்திரப் பாடல்.

குருவின் திருவருளை விதந்தோதும் ''சிவ ஞானபோதம்'' நூலின் காணப்படும் அரிய சூத்திரம் இது.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே''

குருவருள் இருந்தால் தான் பிறவிக்கடலிலிருந்து கரையேற முடியும். அத்தகைய குருவாக முருகனே இருந்து உபதேசிக்க அருள்பெற்றவர் நம் பாம்பன் சுவாமிகள்.

ஒரு முறை பாம்பன் சுவாமிகளின் காலில் ஒரு நெருஞ்சி முள் குத்திவிட்டது. அதை எடுக்க முற்படு கிறார். அந்த முள் இன்னும் ஆழமாகக் காலில் பதிந்துவிடுகிறது. அந்த முள்ளை எடுப்பதற்குள் அவர் கண்ட வலி, தாள முடியாததாக இருக்கிறது.

அப்பா! முருகா! இந்த முள்ளைக் காலில் இருந்து எடுப்பதற்கு உள்ளாக, இவ்வளவு வலியைத் தாங்க வேண்டியது இருக்கிறதே! இந்த உடலுக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் உயிரை இந்த உடலில் இருந்து எடுப்பதற்குள் எவ்வளவு வலியைத் தாங்க வேண்டியது இருக்குமோ''.

''நோயுற்று அடராமல்,
நொந்து மனம் வாடாமல்
பாயிற் கிடவாமல்
உன் பாத மலர் தந்து
எனைப் பிறவி எனும் கடலிருந்து
கரையேற்றிக் காப்பாற்றுவாய் முருகா''

என்று முருகனை வேண்டி கரையேறியவர் மட்டு மல்ல, நம்மை எல்லாம் கரை ஏற்றவல்ல குருநாதராகவும் திகழ்பவர் குமரகுருதாச சுவாமிகள் எனும் நம் பாம்பன் சுவாமிகள்.

அவர் அருளியுள்ள சண்முகக் கவசத்தின் முதல் பாடலில் முருகப்பெருமானே தம் குருநாதர் என்பதை தெளிவுபடுத்துகின்றார் பாம்பன் சுவாமிகள்.

''அண்டமாய் அவனி ஆகி
அறியொணாப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித்
துகளறு தெய்வ மாகி
எண்திசை போற்ற நின்ற
என்னருள் ஈசனான
திண்டிறல் சரவ ணத்தான்
தினமும் என் சிரசைக் காக்க''



''மந்திரமாவது நீறு'' என்று திருஞான சம்பந்தர் பாடியிருப்பதைப் போல திருநீறு மட்டும் நமக்கு மந்திரம் அல்ல., பாம்பன் சுவாமிகள் அருளியுள்ள சண்முகக்கவசமும் மந்திர மறையாகத் திகழ்கின்றது.

இரவில் வழி நடக்கும் போது, வெளியூர் பயணம் போகும் போது, நோய்கள் நலிவுறுத்தும் போது இச்சண்முகக் கவசத்தைப் பாராயணம் செய்தால் மந்திர சக்தி உடைய சண்முகக்கவசம் நமக்குக் காவலாக விளங்கும் என்பதை நமக்கு சுவாமிகளே தெளிவு படுத்தியுள்ளார்கள்.

சண்முகக் கவசத்தின் மகிமையை நம் சுவாமி களே தம்சீடரான ஜோதிடர் சின்னசாமி பிள்ளை என் பவருக்குத் தாம் வரைந்த ஒரு கடிதம் வாயிலாகத் தெளிவுபடுத்தியிருக்கக் காணுகின்றோம்.

''செக்கர்வேள் ஒருவனே என் கடவுள் என இவ்வுலக வாழ்வு ஒழித்து வழிபடலிற் சிறந்தவன் எவனோ, அத்தீவிரதரன் இப்பிறவியிற் தானே வீடு பேறு எய்தி உய்வான்.''

அடியவனாகிய என்னையும், என் சொல்லை யும் நம்பாதவன் இத்தீவிரதர கதியை அடைய மாட்டான். நீ மயங்க வேண்டாம். பரிவிற் பெரியாய்! நீ பாராயணம் செய்கின்ற மகா மகிமையுடைய சண்முகக் கவசம் ஒன்று மட்டுமே நின்னைக் காத்து அக்கதியிற் சேர்க்குமே.''

என்று பாம்பன் சுவாமிகளே சண்முகக் கவசப் பாராயண மகிமையை நமக்கு நன்கு உணர்த்தியிருக்கக் காணுகின்றோம். அத்தகு மகிமை வாய்ந்த சண்முகக் கவசத்தின் முதற் பாடலே ''தொண்டர்கள் குருவுமாகி, துகளறு தெய்வம் ஆகி'' நமக்கு அருள்பவன் செவ் வேள் பரமன் என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

பண்டைவினைப் பயனை அருளாளர்களும் அனுபவித்துத் தான் ஆக வேண்டும்.

பட்டினத்தடிகள் மேல் கள்வன் என்ற பழி வரவும், அவர் கழுமரம் ஏறக் கொண்டு செல்லப் பட்டதற்கும் என்ன காரணம் என்பதைப் பட்டினத்தடி களே கூறுகின்றார்.

''என்செயல் ஆவது யாதொன்றும் இல்லை
இனிதெய்வமே
உன் செயல் என்று உணரப் பெற்றேன் இந்த ஊன்
எடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றும் இல்லை
பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து
மூண்டதுவே''

என்று பண்டை வினைப் பயனை அருளாளர்களும் அனுபவித்தே தீர வேண்டும் எனப் பட்டினத்தடிகள் கூறியிருக்கக் காணுகின்றோம்.

அத்தகைய பண்டைவினைப் பயனாகவே 1923ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் நாள் நம் சுவாமிகள் சென்னையில் தம்பு செட்டித் தெருவில் காலை 10 மணி அளவில் நடந்து போய்கொண்டிருந்த போது விரைந்து வந்த குதிரை வண்டி ஒன்று தடு மாறி கீழே வீழ்ந்த நம் சுவாமிகளின் இடது கணுக் காலின் மேல் ஏறிக் காலினை முரித்து விடுகின்றது.

அப்பொழுது நம் சுவாமிகளுக்கு 74 வயது. காலின் முரிந்த பகுதி வரை வெட்டி எடுத்தால் தான் சுவாமிகள் பிழைக்க முடியும் என்று மருத்துவர்கள் கூறி விடுகிறார்கள்.

சுவாமிகளின் சீடர் திருவல்லிக்கேணி சோதிடர் சின்னசாமிப் பிள்ளையும், அவரது மனைவியார் பாப்பாத்தி அம்மாளும் மன உறுதியோடு இடை விடாமல் சண்முகக் கவசத்தைப் பாராயணம் செய்து வருகின்றனர்.

சண்முகக் கவசத்தில்

''ஏரகத் தேவன் என்தாள்
இருமுழங் காலும் காக்க
சீருடைக் கணுக்கால் தன்னைச்
சீரலை வாய்த்தே காக்க''

என்ற பாடல் வரிகளை ஓதும் போது, சுவாமிகளின் கால் எலும்புகள் - முரிவுபட்ட இரண்டு எலும்புகள் நடுவே முருகனின் வேல்கள் இரண்டு - அவ்வேல்களின் இலைப்பகுதி வந்து பொருந்தித் தாங்கிக் கொண்டு விடுவதாகப் பாராயணம் செய்து கொண்டிருந்த சின்ன சாமிப்பிள்ளை உணர்ந்து அதைச் சுவாமிகளிடம் தெரிவிக்கின்றார்.

கால் முரிவுண்ட பதினோராம் நாள் இரவு, செவ்வேள் பரமனின் வாகனமாகிய மயில்கள் இரண்டு, தோகையை விரித்து வானில் வரச் சுவாமிகளும் கண்டார். குழந்தை வடிவாக முருகன் சுவாமிகளின் படுக்கையில் வந்து அமர்ந்து முரிவுண்ட காலைத் தடவி விடுகிறார். எந்தக் காலை வெட்டினால் சுவாமி உயிர் பிழைப்பார் என்று மருத்துவர்கள் சொன்னார் களோ, அந்த அரசு மருத்துவமனை அதிகாரிகளே அதிசயிக்க தெய்வ வைத்தியத்தால் முரிந்த கால் கூடிச் சுவாமிகள் நடக்கத் தொடங்கினார் என்பது சண்முகக் கவசத்தின் மந்திர மகிமையைக் காட்டும் அற்புத வரலாறாகும்.

இந்த அதிசயத்தைக் கொண்டாடும் வகையில் தான் ஒவ்வொரு ஆண்டும் ''மயூர வாகன சேவை'' சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

குருவருளும் திருவருளும் இருந்தால் அற்புதங் கள் அருளாளாளர்கள் வாழ்வில் நிகழ்ந்த வண்ணம் இருக்கும் என்பதற்கு நம் சுவாமிகளின் வாழ்வில் பற்பல அதிசயங்கள் நடைபெற்று இருப்பதைக் கொண்டு அறியலாம்.

பாம்பன் சுவாமிகள் ''பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம்'' எனும் அரிய நூலைப் பாடியுள்ளார்கள்.

பால், தயிர், நெய், சருக்கரை, தேன் எனும் ஐந்து வகை அபிஷேகப் பொருள்களைக் கொண்டு இறைவ னுக்கு அபிஷேகம் செய்யும் போது பாடக் கூடிய ''இப் பஞ்சாமிர்த வண்ணம்'' பாடல்களைப் பாடிய பொழு தும் ஒரு அற்புதம் நிகழ்ந்துள்ளதைக் காணுகின்றோம்.

சுவாமிகள் அருளிய பஞ்சாமிர்த வண்ணத்தை சுவாமிகளின் சீடர்கள் இருவர் திருச்செந்தூர் சண்முக விலாசத்தில் அமர்ந்து பாடிக் கொண்டு இருக்கிறார்கள். அனந்த சுப்பையர், சுப்பிரமணிய ஐயர் எனும் இரு வரும் தங்களை மறந்து ''பஞ்சாமிர்த வண்ணத்தைப்'' பாடிக் கொண்டிருக்கும் பொழுது கட்டிளங்காளை ஒருவன் அப்பாடல்களை மனமுருகிக் கேட்டு மறைந்து விடுகிறான்.

இவ்வதிசயத்தைக் கண்டு முத்தம்மை என்கின்ற அம்மையார் மறுநாளும் அதே வாலிபன் வந்து பஞ்சாமிர்த வண்ணம் பாடுவதை உருகிக் கேட்பதைக் கண்டு, அவன் அருகில் சென்று 'நீ யாரப்பா? நேற்றும் பார்த்தேன். மாயமாய் மறைந்து விட்டாய்! இன்றும் மனமுருகிக் கேட்டுக் கொண்டிருக்கிறாய்! நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?''.

என்று கேட்கிற போது ''அம்மையே! இன்னுமா தெரியவில்லை! எங்கே பஞ்சாமிர்த வண்ணம் பாரா யணம் செய்யப்படுமோ அங்கே வரக்கூடிய நான் செந்தில் வடிவேலன் தான்'' என்று கூறி மறைந்து விடு கின்றார்.

இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்ட நம் பாம்பன் சுவாமிகள் தரம் பாடியுள்ள ''பெருவேண்டு கோள்'' எனும் பதிகத்தில் இவ்வற்புதத்தைக் கூறி

"பரிவாளர்கள் அங்கு ஓதொரு
பஞ்சாமிர்த வண்ணம்
.....வந்தோதிய செந்திற் பெருமானே
எனை மறவேல் எனை மறவேல்''

எனப்பாடி நெகிழ்ந்து உருகியிருக்கவும் காணுகின்றோம்.

பழநி முருகன் நம் சுவாமிகளைக் கண்டித்த ஒரு நயமான நிகழ்ச்சி - அதைக் கூட நம் சுவாமிகள் தம் திருப்பாடல்களில் மெய்யை மெய்யாகக் கறியிருக்கிற அற்புதத்தைக் காணுகின்றோம்.

சுவாமிகளுடைய இளமைக் காலத்திலே நடந்த சுவையான நிகழ்ச்சி இது!

சுவாமிகளிடம் தம்முடைய இளமைக்காலத்திலேயே துறவுநாட்டம் மிகுந்து இருந்த ஒரு நாள் தம்முடைய தோழர் அங்கமுத்து பிள்ளை என்பவரிடம் ''மறுநாள் நான் பழநிக்குச் செல்ல இருக்கின்றேன்'' என்று நம் சுவாமிகள் கூறுகின்றார்.

''எப்போது வருவீர்கள்?''என்று கேட்கிறார் அங்க முத்துப்பிள்ளை. ''அது சொல்ல இயலாது''. இது சுவாமிகள் சொன்ன பதில்

''பழநிக்கு வர உத்தரவு, முருகப் பெருமானிடம் இருந்து கிடைத்ததா?'' என்று அங்கமுத்து கேட்க

''ஆம், கிடைத்தது'' என்று ஒரு பொய் சொல்லி விடுகிறார் நம் சுவாமிகள்.

''அப்படியானால் சரி'' என்று அங்கமுத்து சென்றுவிட, தனிமையில் இருக்கும் நம் சுவாமிகளுக்கும் பழநி முருகனின் திருக்காட்சி கிடைக்கிறது.

தோன்றிய முருகன் வலக்கரச் சுட்டு விரலை நிமிர்த்து, அசைத்துப் பல்லைக் கடித்து நம் சுவாமிகளைக் கோபித்து,''எனது கட்டளை என்று ஏன் பொய் கூறினை?'' என்று கேட்கிறார்.

சுவாமிகளும் நடுங்கியவாறு ''என் அப்பனே! என் கடவுளே! நிலபுலம் விழைந்து பொய் புகல் வில்லை.''

''ஆன்மலாபம் கருதியே அவ்வாறு கூறினேன். பொறுத்தருள வேண்டும்'' என்று பணிவுடன் கூற

''இனியான் பழநிக்கு வருக'' என்று கூறுங்காலும் பழநிக்கு நீ வரவொண்ணாது. வருவது இல்லை என்று உறுதி கூறு''

என்று பழநிமுருகன் கூற பாம்பன் சுவாமிகளும் ''அவ்வாறே'' என்று உறுதி கூறப் பழநிமுருகன் மறைந்தான் என்று அதிசய நிகழ்ச்சி நம் சுவாமிகள் தம் பாடல்களில் பாடியிருக்கக் காணுகின்றோம்.

''செந்தமிழ்ச் செவிமடுத்து மகிழும் தேவைத்
திறல் இடும்பன் உயிர் முருக்கி எழுப்பும் தேவைப்
புந்தி நிறைவுடை அருணகிரி சூழ் தேவைப்
புகர் இகந்த கரவருடம் கடகமாதம்
வந்த ஒரு புகர் இரவில்'' பழநிக் கோவில்
வர இஞ்ஞான்று அருளவில்லை அருள் வோம்
பந்தம் அற வருதி எனப் பணித்துப் போந்த
பண்ணவனைப் படர்பவர் எம் பரமர் தாமே''

என்ற பாடல், பழநி முருகன் தோன்றிப் பொய் பேசக் கூடாது எனக் கடிந்து கொண்ட அற்புதத்தைக் கூறுவதாக அமைந்து விளங்கக் காணுகின்றோம்.

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே''

என்று அருணகிரிநாத சுவாமிகள் ''கந்தர் அநுபூதி''யில் அருளியுள்ளதைப் போல தம் அடியார்களிடத்தில்

அருவாகவும்
உருவாகவும்

வந்து பல அற்புதங்கள் புரிபவன் தான் முருகப் பெருமான்.

காஞ்சிபுரம் நம் சுவாமிகள் சென்றிருந்தபோது, ஒரு குமரனாக வந்து ''குமரக்கோட்டம் தரிசிக்க மறந்தனையோ?'' என்று கேட்டு வழிகாட்டிய அற்புதமும் புரிந்துள்ளார் முருகப் பெருமான்.

அற்புத முருகப் பெருமானைக் குருவாகக் கொண்டு, இக்குவலயத்தில் 81 வருடங்கள் வாழ்ந்து (1848 - 1929) வைகாசி மாதம் அமரபட்சம் சஷ்டித்திதியில் முருகப்பெருமானின் திருவடியில் கலந்து இன்றும் நமக்கெல்லாம் குருவாகத் திருவருள் புரிந்து கொண்டுள்ளார் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்.

அத்தகைய பாம்பன் பதிமுளைத்த பவளக் குன்றான நம் பாம்பன் சுவாமிகளின் பொன்னார் திருவடிகளை நாமும் போற்றிப் பணிந்து உய்வடைவோம் ஆக!

★★★

# திருவண்ணாமலையும், திருஞானசம்பந்தரும்

- திருப்புகழ்மாமணி, மு. அருணகிரி,

பொதுவாக மக்களை அவலமும் ஆணவமும் எப்படி எல்லாம் ஆட்டிப்படைக்கிறது என்பதனை சிந்தித்துப் பார்த்தல் அவசியம். இவ்விரண்டும் களைய வேண்டுமானால், இறைவுணர்வில் மனதைப் பதிய வைத்து ஆன்றோர்களின் பாடல்களை பாடி வருவதே சிறந்த சாதனமாகும்.

அடியேன் பல வருடங்களாக திருவண்ணா மலையில் நிகழும் ஸ்ரீ அருணகிரிநாதர் விழாவில் (ஆகஸ்டு 15-தேதி) கலந்து கொண்டு திருப்புகழ் பாடி வீதிவலம் வருவது வழக்கம். அது சமயம் திருவண்ணா மலையில் கார்த்திகை தீப விழாவினைக் காணும் அவா, அடியேன் மனத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது. கடந்த ஆண்டில் (2001) கார்த்திகை தீபத்தை காணும் பாக்கியம் கிட்டியது என் பெற்றோர்கள் செய்த தவப் பயனேயாகும்.

மலை உச்சியில் தீபம் ஏற்றும் தருணத்தில் அடியார்களின் கூட்டம் சொல்ல முடியாது. நாம் மண்ணில் இருக்கிறோமா, விண்ணில் இருக்கிறோமா எனும் ஐயம் ஏற்படும், பஞ்சாட்சர நாமம் ஒலிக்கும் சத்தம் எல்லோருடைய காதிலும், வாயிலும் சொல்ல ஒலித்தது.


அது சமயம் ஞானசம்பந்தர், கார்த்திகை தீப விழாவைப் பற்றிப்பாடிய பாடல் அடியேனுக்கு ஞாபகத்துக்கு வரவே அதையே ஓதிக்கொண்டிருந்தேன். 1400 ஆண்டுகளுக்கு முன்னர் ஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் எந்த அளவுக்கு ஜீவன் கொண்டுள்ளது என்பது பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்தாக இருக்கவா போகிறது?

திருவண்ணாமலை தீபவிழா (ஒளி விழா) வெறும் பௌதீக ஒளிமட்டுமல்ல. 1968ல் அமெரிக்க விண்வெளி வீரர்கள் (Cosmonauts) விண்வெளிப் பயணம் செய்து சந்திரனில் கால் வைத்து, பூமிக்கு திரும்பிய சமயம் பூமியில் ஒரு குறிப்பிட்ட பகுதியி லிருந்து ஒரு மாபெரும் ஜோதி பிரகாசிப்பதைக் கண்டார்கள். பின்னர் அந்த ஜோதி எங்கிருந்து வந்தது என ஆராய்ச்சி செய்தபோது, அந்த இடம் திருவண்ணா மலை என தெரிந்து கொண் டனர். அன்று கார்த்திகை தீபத் திருவிழா நாளாகும். இதற்கு ஆதாரம், ''அண்ணா மலை எனும் கிரி உருவாகிய கிருபைக் கடல்'' எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் திருத்தல யாத்திரையின் போது அடியார்கள் புடை சூழ, அறங்கண்ட நல்லூர் வந்திருந்தார். அங்கிருந்தே திருவண்ணாமலை சிகரத் தைக் கண்டார். கண்டதும் புளகாங்கிதம் அடைந்து பாடித் தொழுதார். அங்குள்ள மண்டபத்தில் தங்கி யிருந்த சமயம் ஒரு ஜோதி தரிசனம் கண்டார். பின்னர், அண்ணாமலையாரே ஒரு சிவமுனிவராய் வந்து, தான் திருவண்ணாமலையில் இருந்து வருவதாகவும் சொன் னார். என்கிராமம் அருகில்தான் உள்ளது. தான் தவறாது திருவண்ணாமலை சென்று, இறைவனுக்கு பூமாலை தொடுத்து வருவதாகவும் கூறினார். உடனே ஞான சம்பந்தர் அச்சிவனடியாரோடு திருவண்ணாமலைக்குச் செல்ல ஆர்வம் கொண்டார். அம்முதியவரைப் பின் பற்றியே சம்பந்தர் சென்றார். அவ்வாறு செல்லும் போது நடுவழியில் மறைந்து விட்டதை அறிந்தார்: அன்னாரை சம்பந்தர் தேடிக் கொண்டிருந்த சமயம், ஒரு கொள்ளைக் கூட்டம் இவர்களை சூழ்ந்துகொண்டு, முத்துச் சிவிகை, முத்துப்பந்தல், பொற்றாளம் முதலிய எல்லாவற்றையும் களவாடி ஓடி விட்டார்கள்.

ஞானசம்பந்தர் இறைவனைத் தியானித்து, இந்தக் கடுஞ்சோதனைக்கு ஆட்படுவதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை. ஆனால் என் னுடன் வந்த உன் அடியார்களை சோதிப்பது என்ன காரணமோ என இறைவனிடம் வேண்டினார்.

''திருவண்ணாமலையை தரிசிக்க ஆடம்பரமும், ஆரவாரமும் வேண்டாம் என்பதை உமக்கு உணர்த்தவே சிவகணங்களால் அவைகளைப் பறிக்கச் செய்தோம். நீங்கள் யாவரும் பஞ்சாட்சரத்தை உச்சரித்துக்கொண்டே



திருவண்ணாமலையை அடைந்ததும், உங்களது உடைமைகள் யாவும் உங்களை வந்தடையும். இது சமயம் உச்சிப் பொழுதாகையால், உங்களது களைப்பு தீரும் பொருட்டு, இங்கேயே உணவருந்திவிட்டுச் செல்லுங்கள்'' என வானொலி வாயிலாக கேட்டறிந்தார் சம்பந்தப்பெருமான். இவரோடுவந்த சிவனடியார்கள் ஒரு கூடாரத்தைக் கண்டனர். அக்கூடாரத்தில் இருந்தவர்கள் இவர்கள் யாவரையும் உள்ளே அழைத்து விருந்தளித்து உபசரித்தார்கள். சிறிது நேரம் ஓய்வு எடுத்துவிட்டு திருவண்ணாமலையை நோக்கிப் புறப்பட்டு சென்றதும், கூடாரமும் அங்குள்ளோர் யாவரும் மறைந்துவிட்டதைக் கண்டு சம்பந்தர் வியப்படைந்தார். ஒரு வழிகாட்டியின் உதவியினால் திருவண்ணாமலையை அடைந்ததும், வழிகாட்டியும் மறைந்தார். அதே நேரத்தில் பறிபோன பொருள்களை யாவும் சிவ கணங்களே மற்றோர் உருவத்தில், சம்பந்தர் தங்கியிருந்த மடத்திலேயே வைத்து விட்டு போயினர்.

ஞானசம்பந்தர், அண்ணாமலையாரே நிகழ்த்திய இவ்வதிசயத்தைக் கண்டு, கண்களில் நீர்மல்க, எம் பெருமானை தொழுதும் பாடியும் பரவசமடைந்தார். அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்து அண்ணாமலையாருக்கு பாமாலை சூட்டி மகிழ்ந்தார். பின்னர் பிரியாவிடை பெற்று, தலயாத்திரையைத் தொடர்ந்தார்.

பெரியபுராணத்தில் கூறப்படாத ஞானசம்பந்தரின் இந்த அரிய வாழ்க்கை நிகழ்ச்சிகள், உபமன்யுவின் ''சிவபக்த விலாசம்'' எனும் வடமொழி நூலில் குறிக்கப்பட்டுள்ளதை, நமக்கு அறிவித்தவர் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி ஆவார்.

★★★

# சரபேஸ்வரர்

- திருமதி இராஜேஸ்வரி விசுவநாதன்

மகாவிஷ்ணு இரண்யனை நரசிம்ம அவதாரம் எடுத்து சம்ஹரித்தார். இரண்யன் தானே பரம்பொருள் என்று ஆணவத்தால் செறுக்குற்று பல அநீதிகளை இழைத்துக் கொண்டிருந்தான். தேவர்கள் எல்லோரும் முறையிடவே ஸ்ரீ மகாவிஷ்ணு நரசிம்மமாய் தூணிலிருந்து வெளிப்பட்டு இரண்யனை அழித்து தேவர்களையும் நீதியையும் காத்தார் என்பது புராணம். அப்படி இரண்யனை அழித்த போது ஸ்ரீ நரசிம்மபெருமான் அரக்கனாகிய இரணியனின் இரத்தத்தை உறிஞ்சியதால் அவருடைய கோபம் தணியாமல், அதனால் பல விபரீத விநாச விளைவுகள் ஏற்பட்டது. அந்த நரசிம்மம் கோபத்தை அடக்காமல் எதற்கும் அடங்காமல் உலகத்தை அழிக்க முற்பட்டபோது அதை அடக்க சிவபெருமான் எடுத்த உருவமே சரபேஸ்வரமூர்த்தம்.

சிவன், மஹாவிஷ்ணு, பிரம்மா - இம் மும்மூர்த்திகளுமே பக்தர்களுக்கு வரம் தருவதில் சிறந்த வல்லுநர்கள். பக்தர்கள், முனிவர்கள், அரக்கர்கள் கடுந்தவம் செய்து இவர்களின் தரிசனத்தைப் பெறுவார்கள். அவர்கள் முன்தோன்றி அவர்கள் கேட்கும் வரத்தை, அவர்களின் பக்தியைப் பாராட்டி கேட்கும் வரத்தை வாரி வழங்கிவருவார்கள். பின்னர் வரம் பெற்ற முனிவர்களால், அரக்கர்களால் உலக மக்களுக்கும், தேவாதி தேவர்களுக்கும் இன்னல்களும், துன்பங்களும், தொல்லைகளும் நேரும்போது, அவர்களின் அட்டகாசத்தைத் தாங்கமாட்டாமல் பொறுக்க மாட்டாமல், கூடி ஆலோசனை செய்து ஒருவர் கொடுத்த வரம் பலிக்க, மற்றொருவர் மாற்றுவழி கொண்டு அந்த அரக்கர்களை, வரத்தை துஷ்ப்ரயோகம் செய்பவர்களை அழிப்பார்கள்.

ஒரு சக்தி கட்டுக்கடங்காமல் போய் விபரீதம் ஏற்படும்போது மற்றொரு சக்தி அதைக் கட்டுப்படுத்த வேண்டியது உலகைப் பாதுகாப்பதற்கு அவசியமாகிறது. ஆகவே கூட்டு முயற்சியும், ஒருவரை ஒருவர் தேவைப்படும்போது அடக்கவும் வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு சக்தி கட்டுப்படாதபோது, அதாவது நரசிம்மமாகிய விஷ்ணுசக்தி கட்டுக்குள் அடங்காத போது மற்றொரு சக்தியாகிய சிவசக்தி அதைக்கட்டுப்படுத்த எடுத்த உருவம்தான் அந்த சரபேஸ்வரர் மூர்த்தம்.

''இந்தியர்கள் பறவைகளையும் 'மிருகங்களையும் தங்கள் வழிபடும் மூர்த்திகளாக அமைத்துக் கொண்டு வழிபடத் தெரிந்திருக்கிறார்கள்.'''

- பெர்னாட்சா

எங்கும் உள்ள இறைவனை - பரம்பொருளை பறவையாகவும், விலங்குகளாகவும் உருவகப்படுத்தியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்ற பக்தப்பிரகலாதனின் வாய்ச்சொல்லை மெய்ப்பிக்க வேண்டித் தூணில் பிறந்ததுதான் செங்கட்சீயம், நரசிம்ம அவதாரம். அந்த நரசிம்மரை சாந்தப்படுத்திய ரூபமே சரபேஸ்வர மூர்த்தம்.

## சரப தத்துவம்

பக்தர்கள் தங்கள் இந்திரியங்களை அடக்கி ஒடுக்கி மனதை ஒருநிலைப்படுத்தித் தானே தெய்வமாகும் ஒரு நிலைக்கு கிட்டத்தட்ட வந்துவிடுகிறார்கள். இங்கே இந்திரிய ஒடுக்கமே இரணிய சம்ஹாரம். அப்படி தானே தான் இறைவனாக, தெய்வமாக, இறை நிலைக்கு வரும்போது சக்தி கூடுதலால் அகம்பாவமும் கூடவே ஒட்டிக்கொண்டு வந்துவிடுகிறது. இந்த அகங்காரத்தை ஒழிக்காவிட்டால் - விடாவிட்டால், மற்ற இந்திரியங்களை ஒடுக்கி வெற்றி பெற்றும் உபயோகமில்லை, பயனில்லை. அப்படிப்பட்ட அகங்காரத்தை ஒடுக்கிய சக்தியே சரபேஸ்வரர்.

ஸ்ரீசரபேஸ்வரர் தன் இறக்கைகளாலும், கால்களாலும் ஸ்ரீநரசிம்மத்தைக் கட்டியணைத்து நரசிம்மத்தின் சினத்தை - உக்கிரத்தைதணித்தார். பின்னர் - உணர்ந்த ஸ்ரீ மகாவிஷ்ணு வருந்தி சிவனைப் பாடியதாக இதை புராணங்கள் கூறுகின்றன. சிவமும் மஹாவிஷ்ணுவும் ஒன்றாக பக்தர்களுக்கு தரிசனம் தந்து தேவர்களைப் பார்த்து அருள்மொழி பகர்ந்தார்கள். பாலும் பாலும், நெய்யும், நெய்யும், கலந்ததுபோல் சிவமும், விஷ்ணுவும் கலந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

நரசிம்மம் என்பது மனிதன், சிம்மம் இரண்டும் கலந்த உருவம். சரபம் என்பது மனிதன், யாளி, பக்ஷி இம்மூன்றும் கலந்த உருவம்.



சரபர் தன் நான்கு கைகளில் மான், மழு, ர்ப்பம், தீ இவைகளை வைத்துக் கொண்டிருக்கிறார். நான்' என்ற அகந்தையை ஒழிக்கக்கூடியது மழு. மான் ப்போதும் சஞ்சலப்பார்வையுடையது. சஞ்சலப் பார்வையை மன ஒருநிலைப்படுத்தினால்தான் ஒழிக்க முடியும். ஒரு கையில் பாம்பு இருப்பது குண்டலினி சக்தியை எழுப்பிச் செயல்பட வேண்டும் ன்பதைக் குறிக்கிறது. மற்றொரு கையில் இருப்பது ஞானாக்னி. இப்பொருள்களின் தத்துவம் நான் என்ற அகந்தையை விட்டொழித்து சாத்வீக குணம் அடைந்து மனத்தை ஒருநிலைப்படுத்தி குண்டலினி சக்தியை எழுப்பி ஆத்மஞானத்தைப் பெற வேண்டும். இதைத் தான் ஸ்ரீ சரபர் உபதேசிக்கிறார்.

ஒவ்வொரு அவதாரத்தின் மூலமும், இறைவன் மக்களுக்கு எப்படி வாழவேண்டும் என்று உணர்த்து வதுபோல, ஒவ்வொரு உருவம் எடுப்பதன் மூலமும் மனிதன் எப்படி வாழ வேண்டும் எப்படி மாயை, ஜன்மம் முதலியவற்றை வெல்லவேண்டும் என்று நுட்சுமமாக, குறிப்பாக, சொல்லாமல் சொல்லுகிறார். எனவே ஒவ்வொரு உருவத்திலும் தத்துவங்கள் அடங்கி இருக்கும். அதைப் புரிந்து கொண்டு நாம் நல்லபடி வாழ்ந்து இறைவனடி பின்பற்ற வேண்டும்.

## சரபத் திருவுருவம்

தலை சரபஉருவம், (பயங்கர பட்சியும், யாளி யும் கலந்த முகம்) இடுப்புவரை சர்வேஸ்வரர் போன்ற பூரண அம்சம் அதாவது மனித ரூபம். துடையில் கிடத் திய நரசிம்மம் உடையவர். இரண்டு இறக்கைகள் (ஸ்ரீ துர்கா, ஸ்ரீ பிரதிபயங்கரா தேவியார்). மூன்று கண்கள் (சந்திரன், சூரியன், அக்கினி) துடிக்கும் நாக்கு, தூக்கிய காதுகள், கருட மூக்கு நான்கு கரங்கள் (கரங்களில் மழு, மான், சர்ப்பம், தீ) எட்டுகால்கள் (கால்களில் வஜ்ர நகங்கள். (காந்தசக்தி பொருந்தியவை)

இப்படி பயங்கர பட்சியும், பயங்கர மிருகமும் கலந்த உருவம் தான் சரபேஸ்வரரின் திருவுருவம்.

நரசிம்மரின் இரத்தத்தில் கலந்த விஷத்தன்மை களை, அசுரத்தன்மைகளை, தனது வஜ்ரநகங்களால், அதன் காந்த சக்தியால், தன்னுள் இழுத்துக்கொண்டு நரசிம்மமூர்த்தியை சாந்தஸ்வருபமாக மஹாவிஷ்ணு வாக மாற்றியது போல், அவரைக்காண வரும் பக்தர் களையும், அவர்களுடைய துர்க்குணங்களை நீக்கி, சாந்தமாக ஆக்குகிறார் ஸ்ரீசரபர். புத்தி சித்தபிரமை பிடித்தவர்களும் இங்கே வந்து குணம் அடைந்து

செல்கிறார்கள். இதற்காக சரபர் வேள்வி இங்கே நடக்கிறது.

## வரலாறு

சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் சரபமூர்த்தியை குலதெய்வமாகக் கொண்டவர்கள்.

அவர்கள் சோழநாட்டினருடன் நல்லுறவு கொண்டிருந்தபோது தென்னாட்டில் ஸ்ரீ சரபேஸ்வரரின் பெருமை பரவலாயிற்று.

கி.பி. 800 ஆம் ஆண்டிலேயே ஸ்ரீ சரபர் வழிபாடு மிகச்சிறப்பாக அமைந்திருக்கிறது. பிறகு சோழ மன்னன் குலோத்துங்கன் கி.பி. 1200 ஆம் ஆண்டு வாக்கில் கும்பகோணத்திற்கருகில் உள்ள திருபுவனத்தில் இத்திருக்கோயிலை அமைத்தான் எனக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. கி.பி. 800 முதல் கி.பி. 1200 வரை 400 ஆண்டுகாலம் இத்திருக்கோயிலிலும் ஸ்ரீ சரபர் வழிபாடும் மிகச் சிறந்து விளங்கி வந்துள்ளதெனத் தெரிகிறது.

இத்திருத்தலத்திற்கு திரிபுரவனம், வில்வவனம், திரிபுவனபுரம் போன்ற பெயர்களும் உண்டு. காவிரிக்கரையின் தென்பால் உள்ளது.

## தலச் சிறப்பு

கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் 7 கி.மீ. தூரத்தில் உள்ள திருபுவனத்தில் அமைந்துள்ளது சரபேஸ்வரர் ஆலயம். இங்கு மட்டும் தான் ஸ்ரீ சரபேஸ்வரருக்குத் தனி ஆலயம் உள்ளது. ரயில் பயணம் செய்வோர் திருவிடைமருதூரில் இறங்க வேண்டும். (2 கி.மீ. தூரம் உள்ளது).

இங்குள்ள திருக்கோயிலின் மூலவர் பெயர் நடுக்கம்தீர்த்த பெருமான். (கம்பகரேஸ்வரர்) கம்பம் என்றால் நடுக்கம். அதனால் தான் பூமியின் நடுக்கத்தை பூகம்பம் என்று சொல்லுகிறோம். இங்குள்ள நாயகியின் பெயர் அறம் வளர்த்த நாயகி (தர்மஸம்வர்த்தினி). உற்சவர் சோமாஸ்கந்தர்.

இத்திருக்கோயிலில் குடிகொண்டுள்ள சிவபெருமான் சரபமூர்த்தியாய் உருக்கொண்டு நரஸிம்ம மூர்த்தியின் உக்கிரத்தை தணித்தார். நரசிம்ம அட்டகாசத்தால் ஏற்பட்ட நடுக்கத்தை இவர் தீர்த்ததால் இவருக்கு நடுக்கம் தீர்த்த பெருமான் என்று பெயர்.

கி.பி. 792 முதல் 875 வரை அரசுபுரிந்த மதுரை மன்னன் வரகுணபாண்டியனின் நடுக்கத்தை இங்குள்ள சிவபெருமான் போக்கியிருக்கிறார். வரகுண பாண்டியனுக்கு பிடித்த பிரம்மஹத்தி தோசம் திருவிடைமருதூரில் (அருகில் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது) நீங்கப் பெற்றும், அதன் நடுக்கம் இத்திருத்தலத்துக்கு வந்த பின்தான் முழுதும் நீங்கியதாகக் கூறப்படுகிறது.

மேலும் பாண்டியனைப் பிடித்த பிரம்மகத்தி சோழ அரசன் அவனைப் பின்தொடர்ந்து சென்றதால் அவனையும் பிடித்ததாம். அந்தச் சோழனின் நடுக்கம் இந்த திருத்தலத்திற்கு வந்தபோது நீங்கியதாம். சோழ மன்னன் தன்னிடம் சென்று சேர்ந்ததும், முனிவர்களையும், ஜோதிடர்களையும் அழைத்து காரணங் கேட்க, அவர்கள் நடுக்கம் தீர்த்த பெருமானின் அருளைக் கூறி அவர் சரபரூபத்தில் நரசிம்மத்தின் உக்ரத்தை தனித்ததையும் அவ்வமயம் ஏற்பட்ட நடுக்கத்தைப் போக்கியதையும் கூறியிருக்கிறார்கள். உடனே சோழ அரசன் சிவனின் புகழினைக் கேட்டு, பெருமையைக் கேட்டு, அங்கே சரபர் கோயிலைக் கட்டி ஸ்ரீ சரப சிலையைப் பிரதிட்டை செய்தார் என்றும் கூறுகிறார்கள்.

சோழ மன்னன் ஸ்ரீ சரபரை பிரதிட்டை செய்து ஸ்ரீ சரபேஸ்வரரிடம் வேண்டிக் கொண்டாராம். எல்லா வகையான சத்ருக்களையும் அழித்து எங்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டதற்கிணங்க இன்றும் ஸ்ரீசரபேஸ்வரர் சன்னிதி முன் துதிக்கும் பக்தர்களுக்கு சத்ரு பயம் இல்லை.

## தனிச் சிறப்பு

ஸ்ரீ சரபேஸ்வரருக்கென்று தனிக் கோயில் வேறு எங்கும் இல்லை. ஸ்ரீ சரப மூர்த்தி ரிக், யஜுர் வேதங்களில் கூறப்பெற்றுள்ளமையாலும், இலங்கையில் 'நிகும்பலை' என்னும் நகரில் சரபசக்தியாகிய 'ஸ்ரீ ப்ரதிபயங்கரா' தேவியை இராவணனும் இந்திரஜித்தும் இராமபிரானை வெல்வதற்காக வேண்டி வேள்வித் தலைவியாக ஸ்ரீ பிரதிபயங்கராதேவியை வைத்து யாகம் செய்ததால் அந்த யாகத்தை 'நிகும்பலை யாகம்' என்று வரலாறு கூறுகிறது. சரபமூர்த்தியின் தொன்மையும் பராக்கிரமமும் நன்கு விளங்குகிறது.

சிவ பரத்துவ சாதகமாக நிக்ரஹ, அனுக்கிரஹ சக்திகளை உடைமையின் இரண்டிலும் நிக்ரக சக்தி மிகுந்த சிவ பராக்கிரமமாய் இருத்தலின் ஸ்ரீ சரப மூர்த்தியின் வழிபாடு தற்காலத்தில் சிறப்பாக முக்கியத்துவம் அடைந்து வருகிறது. இராமாயண காலத்தில் சிறப்பாக இயற்றப்பட்ட செய்யப்பட்ட 'நிகும்பலை யாகம்' தற்காலத்தில் நவீனமாக மறுமலர்ச்சி பெற்று துன்பங்களும் துயர்களும் துடைக்கச் செய்யப்பட்டு பிரசித்தி பெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் ஸ்ரீ சரபர் சந்நிதி வழிபாடு பிரஸித்தி பெறவும், இத்திருக்

கோயிலில் பக்தர்கள் வழிபாட்டிற்கு ஏற்றவகையில் இக்கோயில் நிர்வாகம் சிறந்து செயல்பட்டு வருகிறது.

இத்தலம் கிழக்கு நோக்கிய தலம். பிரம்மாதி தேவர்கள், இலக்குமி, மாந்தாதா, வருணன், விஷ்ணு, சித்ராதன், நாரதர், வரகுணன், இராஜராஜன் போன்றோர் வழிபட்ட திருத்தலமாகும்.

திரிபுராதிகள் தேவர்களுடன் போர் புரியும் வலிமை பெற தவம் செய்து, அத்தவப் பயனால் நினைத்த இடத்திற்கு பறக்கும் சக்தியைப் பெற்று மூன்று புரங்களைப்பெற்று சிறக்குமாறு அருள்பாலித்த தலம்.

**தலவிருட்சம்** : வில்வ மரம்
**தலதீர்த்தம்** : ஆறு தீர்த்தங்கள் - சரபதீர்த்தம், தேவதீர்த்தம், ஞான தீர்த்தம், வியாச தீர்த்தம், பிருகுதீர்த்தம், சித்த தீர்த்தம்.

## ஆலய அமைப்பும் சிறப்பும்

திருபுவனத்தின் நடுவில் கிழக்கு நோக்கி இத் திருக்கோயில் அமைந்துள்ளது. இரண்டு கோபுரங் களும், மூன்று நுழைவாயில்களும் உள்ள இத்திருக் கோயில் ஒரு பிரம்மாண்டமான திருக்கோயில். இங்குள்ள கருவறை கோபுரம் மிகப்பெரியது. முழு வதும் கருங்கல்லால் ஆனது. சிற்பத்திறன் மிக்கது. கருவறை விமானம் அறிவானந்த வடிவமானது என்று தலவரலாறு கூறுகிறது. கோபுரம் நாற்சதுரமாக அமைந் திருக்கிறது

இக்கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. முதல் பிரகாரத்தைச் சுற்றித் திருச்சுற்று மாளிகை உள்ளது. இந்தப் பிரகாரத்தின் நடுவில் நடுக்கம் தீர்த்த நாயகர் (மூலவர்) சந்நிதி உள்ளது. மூலவர்க்கு வட பால் அம்மன் ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி கோயில் உள்ளது.

வடகிழக்கில் தலப்பெருமையைத் தன்னுள்ளே கொண்டுள்ள ஸ்ரீ சரபமூர்த்தி தென்முகமாக, உக்ரமே வடிவாக வீற்றிருக்கிறார்.

இரண்டாம் பிரகாரத்தில் வசந்த மண்டபம் உள்ளது. இங்கே அமைந்துள்ள மிகப் பெரிய தானிய கிடங்குகள், தஞ்சை வளநாட்டின் பெருமையையும் வளத்தையும் குறிப்பதோடு, மன்னர்கள் புத்திசாலித் தனமான அறிவுத்திறனோடு, அவசரக்கால, போர்க்கள தேவைக்காக எவ்வளவு பாதுகாப்பாக தானியங்களை சேமித்து காத்துவைக்க ஏற்பாடுகளை, வசதிகளை செய் திருக்கிறார்கள் என்பதையும் தெரிவிக்கிறது. போர்க் காலங்களில் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள், பசுக்கள் இவர்களுக்கு அடைக்கலம் தந்து, உணவு, பால் எல்லாம் மடப்பள்ளியில் சமைத்து கொடுத்துப் பாதுகாத் திருக்கிறார்கள். கோட்டைபோல் கட்டியிருக்கிறார்கள் இக்கோயில்களை என்றால் மிகையாகாது. இக்கோயில் களுக்கும் சுரங்கப்பாதையும் இருந்திருக்கும்.

பிரம்மாண்டமான பிரகாரத்தைச் சுற்றிலும் கல்லால் இராமாயணக் காவியமும், திருத் தொண்டர் புராணமும் படைத்திருக்கிறார்கள். யாளிகளும், சிற்பங் களும், தாமரையும் கண்கொள்ளாக் காட்சி. ஸ்ரீ ராமர் வில்பட்டு மாரீசமான் அரக்கனாக மாறுவதை காட்சி யாக வடித்திருக்கிறார்கள். மிகவும், அற்புதமாய் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

விநாயகர், துர்க்கை, சண்டிகேசருக்கான தனித் தனி பெரிய சந்நிதிகள், மிகப்பெரிய மேடை, அமைப்பு விரிந்து பரந்துள்ள பிரகாரம், ஒரேசமயத்தில் பத்தாயிரத் துக்கும் மேற்பட்டோர் அமர்ந்து கலைநிகழ்ச்சிகளை ரசிக்கும்வண்ணம் உள்ளது.

இத்திருத்தலத்தில் ஸ்ரீ கம்பகரேஸ்வர் லிங்க ரூபத்தில் கல்லில் இருக்கிறார். ஸ்ரீ சரபேஸ்வரர் உலோக விக்ரகமாக இருக்கிறார்.

இத்திருத்தலத்தில் படிகளில் ஏறிச்சென்றுதான் பெருமானை வழிபட வேண்டும். மேலேறி உள்ளே செல்லும்முன் சன்னல் வழியாக கோபுர தரிசனம் கண்டு பின் நடுக்கம் தீர்த்த பெருமானை தரிசிக்கலாம். மன்னர், கோபுர தரிசனம் செய்து பின் நமச்சிவாயத்தை தரிசிப்பதற்காக இத்தகைய சிறப்பு ஏற்பாட்டை இத் திருக்கோயிலில் செய்திருக்கிறார் என்றால் பொருத்த மாக இருக்கும்.

இங்கே சட்டைநாதர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, சுப்ரமணியர், காலபைரவர், நவக்ரஹங்கள் அதிகார நந்தி ஆகியோருக்கும் தனித்தனி சந்நிதிகள் இருக்கிறது.

இத்திருத்தலத்தில் ஸ்ரீ சரபேஸ்வருக்கு 'ராகு கால நேரத்தில், குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை களில் மாலை 4.30 மணி முதல் 6 மணிவரை சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. அவ்வமயம் பக்தர்கள் ஸ்ரீ சரபேஸ்வரரை 11 முறை சுற்றி வலம் வருகிறார்கள். சிறப்பு வழிபாடாக 11 நெய் தீபங்கள் ஏற்றி வழிபட்டு பகை, வம்புதும்பு, வழக்குகள் நீங்கி மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள் பக்தர்கள். மேலும் எலுமிச்சம்பழ

மாலையும் வடை மாலையும் சாற்றி வணங்கி மகிழ்கிறார்கள். கண் (திருட்டி) பட்ட, புண் (உட்புண், புறப்புண்) பட்ட பக்தர்களுக்கு ஸ்ரீசரபரின் கண் (பார்வை) பட்டதும் போட்டி, பொறாமை, திருப்பு எல்லாம் நீங்கி நல்ல சக்தியும், நல்ல புத்தியும் கிடைக்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இவ்வாலயத்திற்கு சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் நன்கொடையாளர்கள் மூலமாகவும், திருக்கோயில் நிர்வாகம் மூலமாகவும் கும்பாபிஷேகத் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது.

கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சை பெருவுடையார் திருக்கோயில் ஆகியவைகளுக்கு நிகராக சோழமன்னரால் கட்டப்பட்டு உள்ளது இத்திருபுவன திருக்கோயில். கருவறை விமானம் தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் போலவே இருக்கும்.

## வழிபாட்டுப்பயன்

உலகில் பகையும் பிணியும் நீங்கி, பசியும் வளமும் சுரக்கவும், போர்க் குமுறல் அடங்கி அமைதி நிலவவும் இப்பெருமானுக்கு கோடி அர்ச்சனை நிகழ்த்துகிறார்கள்.

கடந்த 7.4.2002 ஞாயிற்றுக்கிழமை அன்று 110-வது ஏகதின லட்சார்ச்சனையும் சரப வேள்வியும் நடைபெற்றது. தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் இந்த ஏகதின லட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ சரபமூர்த்தியை நினைப்பவர்களும், துதிப்பவர்களும் பகைநீக்கம், பாவக்கழிவு, கள்வர், பகைவர், அரசர்களால் ஏற்படும் துன்பம், அகால மரணம், வலிப்பு நோய், கரநோய், எதிர்பாராத விபத்து இவையெல்லாம் நீங்கப்பெறுவர். இம்மை மறுமை இன்பங்களையும் வெற்றியையும் எய்தி இன்புறுவர் என்று சரபகல்பம் கூறுகிறது.

## திருவிழாக்கள்

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியில் பகலில் உற்சவமூர்த்தி சரபருக்கு சிறப்பு அபிஷேகம்.

சித்திரையில் வருடப்பிறப்பும், வைகாசியில் விசாகத்திருநாள், ஆனியில் திருமஞ்சனம், ஆடிப் பூரம், பதினெட்டாம் பெருக்கு, ஆவணியில் மூலம், புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசியில் அன்னாபிஷேகம், கந்த ஷஷ்டி, கார்த்திகையில் தீபம், சோமவாரம், மார்கழியில் திருவாதிரை பத்து நாட்கள் உற்சவம். தை மாதங்களில் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் நடை பெறுகிறது.

பங்குனியில் உத்திரபாதத் திருநாள் விழா 10 நாட்கள் நடைபெறும். 10 நாட்களிலும் பஞ்சமூர்த்திகள் (கணபதி, முருகன், சிவன், அம்பாள், சண்டிகேஸ்வரர்) திருவீதி உலா காலை மாலை இருவேளையும் நடைபெறுகிறது.

பங்குனி உத்திரம் முடிந்தபின் வரும் முதல் ஞாயிற்றுக் கிழமை இரவு ஸ்ரீ சரபேஸ்வரர் வெள்ளி ரதத்தில் திருவீதி உலா வரும் காட்சியைக் காண கணகோடி வேண்டும்.

பங்குனி உத்திரத்திற்குப் பிறகு வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஸ்ரீ சரப மூர்த்திக்கு ஏகதின லட்சார்ச்சனையும், மகாபிஷேகமும் நடைபெறுகிறது.

புரட்டாசி மாதம் வரும் பௌர்ணமியன்று இரவு நிறைபணி உற்சவம் நடைபெறுகிறது. அன்று ஸ்ரீ கம்பகரேஸ்வரரின் சந்நிதியில் இருமருங்கிலும் காய்கனிகளினால் ஆன தோரணம் கட்டிக் கொண்டாடுகிறார்கள். சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெறுகிறது.

ஆடிப்பதினெட்டாம் நாள் பதினெட்டாம் பெருக்கு விழா கொண்டாடப்படுகிறது. அலங்கரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட சப்பிரத்தட்டியில் ஸ்ரீ அம்பாள் அறம் வளர்த்த நாயகியை வைத்து ஊர்வலமாகச் சென்று காவிரிக்கரைக்கு செல்கிறார்கள். அங்கே தீர்த்தவாரி நடைபெறுகிறது. சோழ நாடு சோறுடைத்து என்பார்களே! அப்படிப்பட்ட சோழவள நாட்டின் இறை நாயகி, உழவுத் தொழிலுக்குத் தண்ணீர் அளிக்கும் தாய் காவிரியை சந்தித்து வருகிறாள்.

இவை தவிர மற்ற சிவாலயங்களில் கொண்டாடப்பெறும் அனைத்து திருவிழாக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கைகள் நான்குடன் கால்கள் எட்டும்
கண்ணொளி ரவிமதி அக்கினி சரப
ஏந்திய மான்மழு இரட்டை தேவியர்
சாந்தியைத் தருவார் சரணடைவோமே!

★★★

# சேலம் அருள்மிகு மாரியம்மன், காளியம்மன், முனியப்பன் திருக்கோயில்கள் தல வரலாறு

**- திருக்கோயில் வெளியீடு**

கொங்கு நாட்டிற்கும் நடுநாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ளது சேலம் மாவட்டம். இந்த மாவட்டம் பல மலைகளால் சூழப்பட்டுள்ள பிரதேச மாகும். இம் மாவட்டத்தின்தலை நகர இடமான சேலம் வட்டம் மலைகளாலும் குன்றுகளாலும் சூழப்பெற்று அழகுற அமைந்துள்ளது. மலைவளம் மிக்க நிலப்பரப்பாக இருந்ததன் காரணமாக இந்த இடத்தினை முன்னாளில் 'அசலம்' (மலை) என்ற பெயரிட்டு வழங்கி வந்ததாகவும், காலப்போக்கில் அதன் உச்சரிப்பு சேலம் என்று மாறிவிட்டதாகவும் கூறுகின்றனர்.

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்ற முதுமொழிக்கு இணங்க சேலம் மாநகரில் திருமணி முத்தாறு என்னும் நதி ஓடிக்கொண்டிருக்கின்றது. இது புகழ்மிக்கதொரு வரலாற்றைக் கொண்டதாகும். இந்த நதி சேலம் வட்டத்திற்கு அருகில் உள்ள சேர்வராயன் மலையில் உள்ள ஓர் அத்தி மரத்தடியில் உற்பத்தியாகி மேற்கு திக்கில் பாய்கின்றது. இதே மலையில் உற்பத்தியாகி கிழக்கு திக்கில் மற்றோரு ஆறும் ஓடுகின்றது. மேற்குபுறம் பாயும் ஆறு திருமணி முத்தாறு என்றும், கிழக்குபுறம் ஓடும் ஆறு வசிஷ்ட நதி என்றும் பெயர்களைத் தாங்கி ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த ஆறுகள் ஒவ்வொன்றின் கரைகளிலும் உள்ள ஊர்களில் சிறப்புமிக்க சிவாலயங்கள் ஐந்து உண்டு. அவற்றுள் திருமணி முத்தாற்றின் கரையில் உள்ள ஐந்து சிவஸ்தலங்களின் விவரம் வருமாறு:-

1. சேலம் சுகவனேஸ்வரர் ஆலயம்
2. உத்தமசோழபுரம் - கரபுர நாதர் ஆலயம்
3. பரமத்தி அருகில் பிய்யலூர் விரட்டேசுவரர் ஆலயம்
4. அக்கரம் பரமத்தி பீமேசுவரர் ஆலயம்
5. அக்கரம் வேலூர் பக்கம் இடையார் திருவேல இடையூர் திருவேலி நாதர் ஆலயம்.

மேற்கண்ட திருப்பதிகளில் உள்ள சிவன் கோவில்களின் தரிசனம் இம்மையில் பல நன்மைகளைத் தருகின்றது என்பது மக்களின் நம்பிக்கை.

(அதேபோல் வசிஷ்ட நதிக்கரையில் பேளூர், ஏத்தாபூர், ஆத்தூர், ஆரகலூர், கூகையூர் என்ற ஐந்து பதிகளில் உள்ள சிவாலயங்களில் தரிசனம் செய்தால் பல சிறப்புகளைத் தருகின்றது என்பர்.)

இந்த ஆறு திருமணிமுத்தாறு என்று பெயர் பெற்றதற்கு சுவாரசியமான காரணம் உண்டு. இந்த ஆறு இமயமலையில் சிவபெருமான் ஜடாமகுடத்திலிருந்து பெருகிவரும் கங்கை நதியைப் போன்ற புண்ணியநதி என்று கூறுவார்கள். இந்த ஆற்றின் கரையில், கங்கை நதிக் கரையோரங்களில் உள்ளது போல், சிவனுக்கு உரிய உத்திராட்சமணி மரங்கள் வளர்ந்திருந்தனவாம். சேலத்தில் போக்ஸ் காம்பவுண்டுக்கு அருகில் உள்ள அணைமேட்டின் கரையில் உத்திராட்ச மரம் இருந்ததை பலர் பார்த்திருக்கின்றனர். சமீப காலத்தில் அந்த மரம் வெட்டப்பட்டுவிட்டது. சேலத்திற்கு அருகில் உள்ள கொண்டலாம்பட்டி கிராமத்தில் இந்த ஆற்றின் கரையில் இன்றும் உத்திராட்ச மணி மரங்கள் உள்ளன. இந்த மரங்களிலிருந்து உதிரும் உத்திராட்ச மணிகளான திருமணிகளைத் தன்னகத்தே ஏற்று உருட்டியவாறு ஆறு ஓடிக்கொண்டிருக்குமாம். அன்றியும், இந்த ஆற்றின் கரைகளில் மூங்கில் மரங்கள் அடர்ந்து, செழித்து வளர்ந்திருக்குமாம், குகைப்பகுதியில் மூங்கிற்புதர்கள் இருந்த பகுதியில் உள்ள ஒரு தெருவிற்கு மூங்கிற்பாடித், தெரு (மூங்கப்பாடித் தெரு) என்று, பெயரிட்டு வழங்கி வருவதை இதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். மேலும், சேலத்திற்கு அருகில் உள்ள நெய்க்காரப்பட்டி என்ற கிராமத்தில் இந்த ஆற்றின் கரையில் அமைந்திருக்கும் முனியப்பன் சுவாமியை 'மூங்கிற்கொத்து முனீஸ்வரன்', என்று பெயரிட்டு அழைக்கின்றனர். இந்த கோயிலைச்சுற்றி மூங்கில் மரங்கள் கொத்து கொத்தாக வளர்ந்துள்ளதை இன்றும் காணலாம். ஆற்றின் கரையில் வளர்ந்த மூங்கில்கள் பல ஆண்டுகள் வாழ்ந்து மிகவும் முற்றிய நிலையில் வெடிக்குமாம். அப்பொழுது மூங்கிற்கணுவில் உள்ள இடை வெளியில் வளர்ந்திருக்கும் மூங்கில் முத்துக்கள் வெடிப்பினால் ஏற்பட்ட பிளவின் வழியாக வெளிச் சிதறி நதியில் விழுந்து நீரோட்டத்துடன் கலந்து ஓடி வருமாம். உத்திராட்சமணியான திருமணியும், மூங்கிலிற் பிறந்த முத்தும் இந்த நதி நீருடன் சேர்ந்து வந்த காரணம்



**சேலம் மாவட்டத்தில் நன்கு பராமரிக்கப்பட்ட திருக்கோயில் என சங்ககிரி வட்டம் கூடலூர் செல்லாண்டியம்மன் திருக்கோயில் தேர்வு செய்யப்பட்டு, சேலம் இணை ஆணையாளர் திருமிகு ச. இளங்கோ, பி.ஏ., பி.எல். அவர்கள் சுழற்கேடயம் வழங்குகிறார்.**

பற்றி, இதற்குத் திருமணிமுத்தாறு என்று பெயர் வைத்ததாகக் கூறுகிறார்கள்.

இந்த ஆற்றின் புனிதத்தன்மையை விளக்கும் செவிவழிக் கதை ஒன்றுண்டு. சேலம் நகரில் தாசி ஒருவள் வசித்து வந்தாளாம். அவள் இறந்தபொழுது அவளது உடலை புதைக்காமல் மிருகங்களுக்கு உணவாகட்டும் என காட்டில் வீசி எறிந்துவிட்டனராம். அவளது உடலை மிருகங்களும் கழுகுகளும் கிழித்துக் கொத்தித் தின்றனவாம், அவ்வாறு தின்ற பருந்துகளிலொன்று இவளது எலும்புத்துண்டு ஒன்றைப் பற்றியவண்ணம் அதனுடைய கூட்டை நோக்கிப் பறந்து சென்று கொண்டிருந்ததாம். அந்த பருந்து இந்த ஆற்றின் மேலாகப் பறந்து சென்றுகொண்டிருந்த பொழுது அதனது பிடியிலிருந்த எலும்புத் துண்டு நழுவி ஆற்றில் விழுந்துவிட்டதாம். புண்ணிய நதியாகிய திருமணி முத்தாற்றில் உள்ள சிவபெருமானுக்கு உகந்த உத்திராட்சமணி கலந்த நீரின் ஸ்பரிசம் அந்த எலும்புத் துண்டுக்குக் கிடைத்ததால் தாசி பாவம் நீங்கப் பெற்று முக்தி அடைந்ததாகச் சொல்லுகிறார்கள்.

சேர்வராயன் மலையில் பள்ளாறு என்று பள்ளமான ஒரு இடம் உண்டு. அதன் வழியாகவே இந்த ஆறு ஓடியது. அந்தப் பள்ளத்தில் பெரும்பாறை ஒன்று விழுந்து சேலம் பக்கம் நீர் வரும் பகுதியை பெரிதும் அடைத்துவிட்டது எனவும் அதன் காரணமாக ஆற்றில் நீர் வரத்து நின்றுவிட்டது என்றும் கூறப்படுகிறது. தற்பொழுது ஆற்றில் கழிவு நீர் ஓடிக்கொண்டிருந்தாலும், மழைக்காலங்களில் இந்த ஆற்றில் நீர் ஓடுவது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது. இந்த ஆற்றின் கரைகளில் பல இடங்களில் உள்ள பாழடைந்த படித்துறைகள் இந்த ஆற்றின் பெருமையை நினைவூட்டும் சான்றாக அமைந்துள்ளன.

இவ்வாறு புகழ் கொண்ட திருமணி முத்தாற்றின் கரையில் சிறந்து விளங்கியது குகை என பகுதி ஆகும். இங்கு சிறப்புமிக்க கீழ்க்கண்ட மூன்று ஆலயங்கள் உள்ளன.

1) அருள்மிகு ஆதி முனீஸ்வரர் ஆலயம்

2) அருள்மிகு மாரியம்மன் ஆலயம்

3) அருள்மிகு காளியம்மன் ஆலயம்

இந்தப் பகுதிக்கு குகை என்று பெயர் வரக் காரணம் அருள்மிகு ஆதி முனீஸ்வரர் கோயிலே ஆகும். இந்தக் கோயில் கட்டியுள்ள இடத்தில் ஒரு குகை இருந்தது. அந்த குகையில் மௌன சுவாமியார் என்னும் சாது ஒருவர் தங்கி தவம் செய்து வாழ்ந்து வந்தார்.

அந்தப் பகுதியைச் சுற்றியே முதலில் குடியிருப்புகள் தோன்றின. அங்கு வாழ்ந்த மக்கள் குகையில் தவம் மேற்கொண்டிருந்த முனிவரை பயபக்தியுடன் வணங்கி வந்தனர். வைகாசி மாதத்தில் ஒரு நாள் அந்த முனிவர் மறைந்து விட்டார். அவர் யோக சித்தியடைந்து பஞ்ச பூதத்தில் ஒன்றாகக் கலந்து, பரம்பொருளுடன் ஐக்கிய மாகி விட்டார் என்று மக்கள் அறிந்தனர். அதன் பின்னர் அவர் வாழ்ந்து வந்த குகையை மூடி அந்த இடத்தின் மீது முனிவரின் சிலையை பிரதிஷ்டை செய்து கோயில் எழுப்பி வணங்கி வருகின்றனர். இன்றும் அவர் சூக்கும மாயிருந்து தன்னை வழிபடுபவர்களுக்கு சாந்தியும் அருளும் வழங்கிக் காத்து வருவதாக மக்கள் நம்பிக்கை யுடன் இருக்கிறார்கள். இதன் உற்சவ மூர்த்தி பஞ்ச லோகத்தாலான, மிக அழகான, அருள்பாலிக்கும் சின்முத்திரையுடன் தண்டுன்றி நின்ற நிலையிலுள்ள முனீசுவரர் சிலையாகும். இதன் ஸ்தல விருட்சம் பவள மல்லிகை மரம். இன்றும் இந்தக் கோயிலின் பிரகாரத் தில் புகுந்தவுடன் பவளமல்லிகையின் நறு மணம் நாசியில் புகுந்து களிப்பை உண்டாக்குவதையும், ஸ்ரீ முனிஸ்வரரின் தரிசனம் உள்ளத்திற்கு சாந்தியையும் அமைதியையும் வழங்குவதையும் ஒவ்வொருவரும் உணரலாம். ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் முனிவர் முக்தியடைந்த நாளை குகைப்பகுதி வாழ் கின்ற மக்கள் திருவிழாவாகக் கொண்டாடி மகிழ் கின்றனர். அன்று மாலை உற்சவ மூர்த்திக்கு அலங்காரம் செய்து குகைப் பகுதி வீதிகளில் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் தவறாமல் நடைபெற்று வருகின்றது.

குகைப்பகுதியில் அருள்மிகு முனீஸ்வரர் கோவில் அமைந்துள்ள பகுதியில்தான் குகைவாழ் மக்கள் முதலில் தங்கள் குடியிருப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்பொழுது ஊரின் கோடியில் அமைக்கப்பட்டன. இந்தக் கோவில்களுக்கு அருகே பெரிய குளம் ஒன்றிருந்தது. ஊர் பெருகி விரிவடைய ஆரம்பித்த பின்னர் தற்பொழுது இந்தக் கோயில்கள் குகைப்பகுதியில் நடுநாயகமாக அமைந்து விட்டன. காலப்போக்கில் குளமும் மூடப்பட்டு விட்டது.

குகை வாழ் மக்களின் செல்வச் செழிப்பிற்கும், வியாபார விருத்திக்கும், ஆரோக்கியமான மகிழ்ச்சி யான வாழ்க்கைக்கும் இந்தக் கோயில்களில் வீற் றிருக்கும் அருள்மிகு மாரியம்மன் அருள்மிகு காளி யம்மன் ஆகிய தெய்வங்களின் கருணையும் அருளுமே காரணம் என்பது இங்குள்ள மக்களின் அசைக்க முடி யாத நம்பிக்கை. அதன் காரணமாக இந்த தெய்வங் களுக்கு ஆண்டுதோறும் ஆடிமாதத்தில் விழா எடுத்து கோலாகலமாகக் கொண்டாடி வணங்கி தங்களின் நன்றியைத் தெரிவித்து வருகின்றனர்.

மலைகள் சூழ்ந்த கனிவளம் நிறைந்த மாங்கனி நகர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற சேலம் மாநகரில் யோகீஸ்வரர் வாழ்ந்து முக்தியடைந்த குகைப்பகுதி யில், அலங்கார சொரூபியாக வீற்றிருந்து அருள் உள்ளத்துடன் ஆன்மாக்களைக் காத்துத் திருக்கோயில் கொண்டு எழநதருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ மாரி யம்மன் ஸ்ரீ காளியம்மன் தெய்வங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆடிப்பெருவிழா 27 நாட்கள் நடைபெற்று வருகின்றது. இந்த நாட்களில் அம்மன்களுக்கு தினசரி அபிஷேக ஆராதனைகளும், மலர் அலங்காரம் மற்றும் பூஜைகளும், மலையில் உற்சவ மூர்த்தங்களின் ஊர் வலங்களும் விமரிசையாக நடைபெறும். இந்த திரு விழாவில் தலையாய மற்றும் பிரசித்தமான நிகழ்ச்சி கள் அம்மன்களுக்கு சக்தி அழைத்தல், மாரியம்மனுக்கு உருளு தண்டம் போடுதல், காளியம்மன் சூர சம்ஹாரம் செய்தல், காளியம்மனுக்கு அக்கினி குண்டம் வளர்த்து பூ மிதித்தல், வண்டி வேடிக்கை, சத்தாபரணம் ஆகியவை களாம். குகையில் நடைபெறும் வண்டி வேடிக்கை தமிழ் நாட்டிலேயே முதலிடம் வகிக்கும் சிறப்புடைய தாகும். விழா நடைபெறும் காலங்களில் குகை பகுதி மக்கள் அனைவரும் தங்கள் இல்லத்தின் முன் ஒரு மின் விளக்கை ஏற்றி ஊரையே ஒளி வெள்ளத்தில் மிதக்கச் செய்வர். தினசரி இரவு கச்சேரிகள், ஆர்க்கெஸ்ட்ரா, நாடகங்கள் என்று பல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்ந்திருப்பர். குகை வாழ் மக்கள் அம்மன் களின் பண்டிகையை பக்தியுடனும், சிரத்தையுடனும், ஆர்வமுடனும் சிறப்பாக நடத்தி மகிழ்ச்சியுடன் தங் களின் நன்றியைத் தெரிவித்து அம்மன்களின் திரு வருளுக்குப் பாத்திரராகி சிறப்புடன் வாழ்ந்து வரு கின்றனர். இந்த திருக்கோயில்கள் அனைத்து சாதி யினருக்கும் பொது வான கோவில்கள் ஆகும்.

இத்தகைய மகிமை மிகுந்த சேலம் குகை அருள் மிகு மாரியம்மன், காளியம்மன் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 24.5.2002 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்று இருப்பது மகத் தான வைபவமாகும்.

பக்தியுடனும், சிரத்தையுடனும் வேண்டு வோரின் குறைகளைத் தீர்ப்பதுடன் நல்வாழ்வையும் வழங்கிவரும் சக்தி மிக்க தெய்வங்களாக அம்மன்கள் விளங்கி வருகின்றார்கள். நாமும் அவர்களின் பாதங் களைப் பணிந்து வணங்கி எல்லாவளமும் பெறுவோ மாக.

ஓம் சக்தி ஓம்.

★★★

# அறக்கருணையும் மறக்கருணையும்

- சேது சிவா

உயிர்கள் கடைத்தேறும் பொருட்டு சிவ பெருமான் அருள் செய்யும் முறைமை அறக்கருணை என்றும், மறக் கருணை என்றும் சாத்திரங்களில் கூறப் படுகின்றது. மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங் களால் தம்மை வழிபடுபவர்களுக்குப் புரிவது அறக் கருணை என்றும்; தம்மிடம் அன்பு செலுத்தாது, எண்ணம், பேச்சு, செயல் ஆகியவற்றால் தீயன செய்யும் உயிர்களைத் தண்டிப்பது மறக்கருணை என்றும் விளக்கப்படுகின்றது.

உயிர்களிடத்து மறக்கருணை செய்வது வெறுப் பினால் அல்ல. தண்டனை கொடுத்து உணரச் செய்து, நல்வழிப்பட்டு நற்கதி அடையட்டும் என்கின்ற கருணை ஆகும்.

பெற்றோர்கள் தம் சொற்படி நடவாத தம் மக் களைப் பயமுறுத்தி, வளாரினால் அடித்து, விலங்கும் இடுவது அவர்களை நல் வழிப் படுத்த வேண்டும் என்னும் இரக்கத்தினாலாகும். இதே முறைதான் ஈச னுடைய கோபமும் என்று சிவஞான சித்தியார் பாடு கின்றது.

தந்தையாய் பெற்றதந்தம் புதல்வர்கள்
தம் சொல் ஆற்றின்
வந்திடாவிடின் உறுக்கி
வளாரினால் அடித்துத்தீய
பந்தமும் இடுவர் எல்லாம்
பார்த்திடில் பரிவே ஆகும்
இந்தநீர் முறைமை அன்றோ
ஈசனார் முனிவும் என்றும்.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் சிவபிரானின் அறக்கருணைக்கு ஆளானவர்கள், விட்டுணு, பிரமன், இந்திரன், தேவர்கள் மற்றும் அசுரர்கள் சிவனின் மறக் கருணைக்கு ஆளானவர்கள். சிவபெருமானின் எட்டு வீரச் செயல்களுக்கு ஆட்பட்டு பிரமன், அந்தகாசுரன், திரிபுராதிபர்கள் (கமலாட்சகன், தாருகாட்சகன், வித்யுன் மாலி) தக்கன், சலந்தராசுரன், கயாசுரன், மன்மதன், யமன் ஆகியோர் மறக்கருணைக்கு ஆளானவர்கள்.

சிவபிரானால் தண்டிக்கப்படுகின்றார்கள் என்றால் அந்த உயிர்களின் குற்றங்களை நீக்கி, சுத்தப் படுத்தப்படுகிறார்கள் என்றே கொள்ள வேண்டும்.

மணிவாசகர் தாம் பாடிய திருவாசகம் திருத் தோணோக்கத்தில்; மன்மதனின் உடலையும், யமனின் உயிரையும், சூரியனின் பல்லையும், கலைமகளின் மூக்கினையும், பிரமனின் தலையையும், தீக்கடவுளின் கையையும், சந்திரனின் கலைகளையும் தக்கன் - எச்சன் என்பவர்களின் தலைகளையும் தூய்மை செய்தார் என்று பாடுகின்றார்.

காமன் உடல் உயிர்காலன்
பல்காய் கதிரோன்
நாமகள் நாசி சிரம் பிரமன்
கரம் எரியைச்
சோமன்கலை தலைதக்கனையும்
எச்சனையும் தூய்மைகள்
செய்தவா தோணோக்கம்
ஆடாமோ

திருச்சாழலிலும், முக்கணுடைய முதல்வனே தண்டித்தால் அது தேவர்களுக்கெல்லாம் வெற்றியே ஆகும் என்றும் பாடுகின்றார்.

அயனை அனங்கனை
அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்
செய்தான் காணேடி
நயனங்கள் மூன்றுடைய
நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத்
தாழ்குழலாய் சாழலோ

நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. ''குட்டுப் பட்டாலும் மோதிரக் கையில் பட வேண்டும்'' என்று. சிவபெருமானால் தண்டிக்கப்பெற்றால் அது பெரும் பேறாகும்.

மறக்கருணை என்பது தண்டனை கொடுத்துப் பின் அருள் செய்வதே என்பதற்குத் திருச்சாழல் மற்றொரு பாடலில் தெளிவாகப் பாடுகின்றார்.

தக்கனையும் எச்சனையும் தலை
அறுத்துத் தேவர்கணம்
தொக்கன வந்தவர் தம்மைத்
தொலைத்தது காண் என்னேடி
தொக்கன வந்தவர் தம்மைத்
தொலைத்து அருளி அருள்
கொடுத்து அங்கு
எச்சனுக்கு மிகைத்தலை மற்று
அருளினன் காண் சாழலோ.

மணிவாசகர் குழைத்த பத்தில், ''கொடி போலும் இடையினை உடையவளை உடலின் பகுதியாகக் கொண்டவனே! எங்கள் தலைவனே! என்னுடைய துன்பங்கள் எல்லாம் முன்னதாகவே நீக்கி ஆட்கொண்டாய் என்று இருந்தேன். எங்கள் சிவலோகனே! ஆ! ஆ! என்று அருள் செய்து, தீவினையுடைய இந்த உடம்பை ஒழிக்காதது எதற்காக? (உம்மிடம் அழைத்து) என்னை ஏவல்தான் கொள்ளவில்லை, தண்டனை கொடுத்தால் அதுவே போதுமானது'' என்று பாடுகின்றார்.

அடியேன் அல்லல் எலாம்முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியேர் இடையாள் கூறா!
எங்கோவே! ஆ ஆ என்று அருளிச்
செடிசேர் உடலைச் சிதையாதது
எத்துக்கு? எங்கள் சிவலோகா!
உடையாய் கூவிப் பணி கொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே.

இப்பாடலுக்கு இலக்கணம் கூறும் புலவர் பெருமக்களும், சைவ சித்தாந்திகளும் தத்தம் நுண்மாண் நுழை புலமைக்கு ஏற்பப் பொருள் கொள்கின்றனர்.

உடையாய்! செடிசேர் உடலைச் சிதைத்து; ஆ, ஆ, என்று அருள் செய்து கூவிப் பணிகொள்ளாது - என்பது அறக்கருணை என்றும்; ஒறுத்தால் ஒன்றும் போதுமே - என்பது மறக்கருணை என்றும் பாடலின் போக்குப் படியே வெளிப்படையாக எம் போலியருக்குத் தெரியும் பொருளாகும்.

திருவாசகத்துக்குப் பொருள் கூறக் கூடாது என்கின்ற கொள்கையும் உண்டு. அவரவர்கள் படித்து, உணர்ந்து, தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் காரணமாக இருக்க வேண்டும். மணிவாசகரும் சென்னிப் பத்தில், ''காயத்துள் அமுது ஊற ஊறற் கண்டு கொள்'' என்று பாடுகிறார்.

இந்தப் பாடலில் ''ஆ, ஆ, என்று அருளிச் செடி சேர் உடலைச் சிதையாதது எத்துக்கு'' என்பதற்கு ஆதரவாக; ஆசைப்பத்தில், ''ஊன் ஒழுகி, ஈக்கள் மொய்த்து, அழுக்குடன் கூடிய சிறிய குடிசையாகிய இந்த உடலைச் சிதைத்து ஒழியும்படி கூப்பிட மாட்டாயா? தேவனே! தேவர்களுக்கு எல்லாம் அரியவனே! சிவனே! என் முகத்தினை இலேசாகப் பார்த்து, ஆ, வா, என்று கூற நான் ஆசைப்படுகின்றேன்'' என்று பாடுகின்றார்.

சீவார்ந்து ஈமொய்ந்து
அழுக்கொடு திரியும்
சிறுகுடில் இது சிதையக்
கூவாய் கோவே! கூத்தா!
காத்து ஆட்கொள்ளும்
குருமணியே
தேவா! தேவர்க்கு அரியானே!
சிவனே! சிறிது என்
முகம் நோக்கி
ஆ! வா! என்ன ஆசைப்
பட்டேன் கண்டாய்
அம்மானே!

மணிவாசகர் மறக்கருணை வேண்டுகின்றார் என்பதற்கு அவரின் வேறு சில பாடல்களைப் பார்ப்போம்.

திருச்சதகம் மெய்யுணர்தல் பதிகத்தில், ''இறைவனே! உன் திருவருள் இருந்தால் நரகத்துக்குச் செல்வதனையும் இகழ மாட்டேன்'' என்கின்றார்.

...... நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறின் இறைவா!

அற்புதப் பத்தில் ''அந்தப் பெரிய வேதங்கள் தேடியும் கிடைத்தற்கரிய பரம்பொருள்; முன்பு செய்த வினைகளைப் பேசியே திரிவேனாகிய என்னைப் பிடித்து, முன்னால் நின்று, தண்டித்துத் தண்டித்துச் சர்க்கரையை (பேரின் பம்) உண்பித்த அருஞ்செயலை நான் கூறுவதற்கு அறி யேன்'' என்று பாடுகின்றார்.



சென்னை நகரில் நன்கு பராமரிக்கப்படும் ஆலயமென புரசை அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் மயிலாப்பூர் அகாடமியால் தேர்வு செய்யப்பட்டு சுழற்கேடயம் வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில் நிர்வாகி திரு எம். நடராசன் சுழற்கேடயம் பெற்றுக்கொள்கிறார்.

...... முன்வினை மிகக்
கழறியே திரிவேனை
பிடித்து முன்நின்ற அப்பெருமறை
தேடிய அரும் பொருள்
அடியேனை
அடித்து அடித்து அக்காரம்
முன்தீற்றிய அற்புதம்
அறியேனே.

ஒத்த அன்பும், பண்பும், கருத்தும் உடைய வர்களாய் இனிதே இல்லறம் நடத்திவரும் இணையரில் (தம்பதியர்) கணவன் தன் துணைவியிடம் பேசுவதனைத் திடீரென்று நிறுத்தி விடுகின்றான். துணைவியானவள், என்ன தவறு செய்தேன், கூப்பிட்டு அதைச் செய், இதைச் செய் என்று வேலை வாங்க வில்லையே. என்று வருந்தி; என்னை நான்கு அடியாவது அடித்து விட்டாலும் நிம்மதி கொள்வேனே'' என்று ஏங்குகின்றாள்.

இதே நிலையில் தான் மணிவாசகரும், ''பழுத்த மனத்து அடியவர்களை உடன் அழைத்துச் சென்று விட்டாயே; என்னை மட்டும் தனியே இங்கு இருத்தி விட்டாயே; என்னை உடன் அழைத்துச் சென்று ஏவல் கொள்ளவில்லை. எனக்குத் தண்டனை கொடுத்தாலும் அதுவே போதுமானது ஆகும்'' என்று வருந்தி ஏங்கி; ''ஒறுத்தால் ஒன்றும் போதுமே'' என்று வேண்டுகின்றார்.

★★★

# அமிர்தானந்தம்

## – சிறுகதைச் சித்தர் ஏ.வி. ராஜகோபால்

(ஆன்மீகத்தில் தலைசிறந்த நாடு நம் இந்தியத் திருநாடு என்பதை இச்சிறுகதை வாயிலாக நம் நெஞ்சைத் தொடும் வகையில் விவரிக்கின்றார் ''சிறுகதைச் சித்தர்'' ஏ.வி. ராஜ கோபால் அவர்கள்)

திருச்செந்தூர் கோயில் மண்டபத்தில் சுவாமி அமிர்தானந்தர் கம்பராமாயணச் சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்தார். அருமையான, அறிவு பூர்வமான சொற்பொழிவுகளுக்குப் பெயர் போனவர் அமிர்தானந்தர். தனக்கென ஒரு கூட்டமோ, அமைப்போ ஏற்படுத்திக் கொள்ளாமல் ஆத்மார்த்தமாக ஆன்மீகப் பணியில் ஈடுபட்டிருப்பவர் அவர்.

அன்றைய கூட்டத்திற்கு நூறு, நூற்றி இருபது பேர் வந்திருந்தனர். அமிர்தானந்தரின் சொற்பொழிவை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அமிர்தானந்தரின் பார்வை மண்டபத்தின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வெள்ளை நிற மனிதனை அடிக்கடி தொட்டு வந்தது. இதென்ன, இவன் அயல் நாட்டவனைப் போல் தோன்றுகிறானே? இவனுக்கென்ன என் பேச்சில் ஈடுபாடு ஏற்பட முடியும்? இப்படிக் கவனித்துக் கொண்டு இருக்கிறானே? அதுவும் தவிர இவனுக்குத் தமிழ் தெரியுமா? நாம் பேசுவது புரியுமா? என யோசித்தபடி இருந்தார்.

கூட்டம் முடிந்தது. பலர் வந்து அமிர்தானந்தரைப் பாராட்டினார்கள். அமிர்தானந்தர் பார்த்தார். அந்த வெள்ளைக்கார மனிதன் தன்னுடன் பேசுவதற்காகத் தூரத்தில் தயங்கித் தயங்கி நிற்பதைப் பார்த்தார். புன்சிரிப்புடன் தலை அசைத்து அருகில் வருமாறு சமிக்ஞை செய்தார்.

அவன் அவரை நெருங்கியபோது கிட்டத்தட்ட மற்ற எல்லோருமே போய் விட்டிருந்தார்கள். அவன் அவரிடம், ''என் பெயர் இஷ்ட தேவன் மயூரன்'' என்றான். அமிர்தானந்தரின் முகத்தில் ஏற்பட்ட வியப்புக் குறியைக் கவனித்த அவன், ''சுவாமி, முதலில் என்னைப் பற்றிய விவரங்களைக் கூறிவிடுகிறேன். நான் இப்போது ஒரு பெரிய தேடுதலில் ஈடுபட்டு திசைத் தெரியாமல் திண்டாடுகிறேன். அதற்கு நீங்கள் தான் உதவ வேண்டும்.''

அமிர்தானந்தர் அவனைப் பார்த்துப் புன்னகைத்தபடி இருந்தார். அவன் தொடர்ந்து பேசினான்.

''ஐயா, நான் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்தவன். இயற்பெயர் இஸ்து வான் மேயர். என்னைப் போன்ற பலருக்கு ஒரு தடுமாற்றம், இறைவன் என்று ஒருவர் இருக்கிறாரா? எனக்குள் இந்த தேடுதல் வேட்கை ஆரம்பமானது. பல மதத்தலைவர்களைச் சந்தித்தேன். என் சந்தேகங்களைக் கேட்டேன். எனக்குத் திருப்தியாக பதில்கள் கிடைக்கவில்லை. நாடு நாடாகப் போனேன். ஓர் ஊரில் சொன்னார்கள். ஆன்மீகத்தில் தலைசிறந்த நாடு இந்தியா என்றார்கள். வட இந்தியாவில் பல முனிவர்களைக் கண்டேன். அவர்களும் என் சந்தேகத்திற்கான சரியான விளக்கங்களை அளிக்கவில்லை. அந்நிலையில் தான் தமிழ் நாட்டிற்கு வந்தேன். இங்கு தமிழ் கற்றேன். இந்த மொழியினால் ஈர்க்கப்பட்டு என் பெயரை இஷ்ட தேவன் மயூரன் என்று மாற்றிக்கொண்டு விட்டேன். இன்று உங்கள் மிக அருமையான ஆன்மீகச் சொற்பொழிவைக் கேட்டேன். எனக்கு நீங்கள் சொல்லுங்கள். ஆண்டவன் என்று ஒருவர் இருக்கிறாரா?''

அமிர்தானந்தர் பார்த்தார். அந்த நடுத்தர வயதுக்காரனின் முகத்தில் ஒரு தீவிரமும், கண்களில் ஒரு தேடுதலும் தெரிந்தது.

புன்னகையுடன் அவனைப் பார்த்துச் சொன்னார். ''நிச்சயமாக ஆண்டவன் இருக்கிறார்.''

''அதற்கு நிரூபணம்?''

''இருக்கிறது. இன்று நேரமாகி விட்டது. நான் என் இடத்திற்குத் திரும்ப வேண்டும். நாளை என் இருப்பிடத்திற்கு வாருங்கள் பேசலாம்.'' இஷ்டதேவன் முகத்தில் ஒரு புன்னகைக் கீற்று தோன்றி மறைந்தது.

''சுவாமி என் கேள்விக் கணையிலிருந்து நீங்கள் தற்காலிகமாக தப்புவதற்காக, இப்படிச் சொல்லவில்லையென நினைக்கிறேன்.''

அமிர்தானந்தர் இதற்கும் புன்னகைத்தார். ''நாளைக்கு வாருங்கள், பேசுவோம்.''

அடுத்த நாள் அவன் அமிர்தானந்தர் தங்கியிருந்த இடத்தில் சொன்னபடியே ஆஜராகிவிட்டான்.

ஆனால் அவன் அமிர்தானந்தருடன் முதல் நாள் கேட்ட கேள்வியுடன் பேச்சைத் துவக்கவில்லை.

''சுவாமி ஒரு சந்தேகம், கேட்கலாமா?''

அமிர்தானந்தரின் தலையசைப்பை கவனித்து விட்டு அவன் தொடர்ந்தான்.

''சுவாமி, நான் என் தேடுதலில் பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். பல மதங்களைப்பற்றி அறிந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரை பல மதங்களில் கடவுள் ஆணாகத்தான் இருக்கிறார். ஆனால் உங்கள் மதத்தில் பெண்கள் கூட கடவுளர்களாக இருக்கிறார்கள். ஆண் உருவம், பெண் உருவம் இணைந்து ஒரு கடவுள். அக்கடவுள் பெயர் அர்த்த நாரீசுவரர் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு உருவம் இருக்க முடியுமா?''

அமிர்தானந்தர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு மிகவும் மெதுவாக, ஆனால் தெளிவாகப் பேச ஆரம்பித்தார்.

''மிஸ்டர், இஷ்டதேவன் நீங்கள் இப்போது கேட்ட கேள்விக்கு பதில் பின்னால் சொல்கிறேன். முதலில் நீங்கள் நேற்று கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்கிறேன். நீங்கள் என்ன கேட்டீர்கள்? கடவுள் இருக்கிறாரா என்றுதானே? அதற்கு என்னுடைய பதில் - இருக்கிறார். இதைத் தொடர்ந்து நீங்கள் என்னை என்ன கேட்டீர்கள்? அப்படி இருக்கிறார் என்றால், அதற்கு நிரூபணம் என்ன? அவரை எனக்குக் காட்ட முடியுமா? முதலில் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா என்றுதானே?''

அமிர்தானந்தர் பேசிவிட்டு அந்த மனிதனின் முகத்தையே பார்த்தபடி இருந்தார். அவன் முகத்தில் அவர் சொல்வதைக் கேட்பதில் தீவிரம் தெரிந்தது. விடைகளை அறிந்து கொள்ளும் ஆர்வம் இருந்தது.

அமிர்தானந்தர் தொடர்ந்தார்.

''நான் இப்போது உங்களைச் சில கேள்விகள் கேட்கிறேன். பதில் சொல்லுங்கள் பார்ப்போம். உங்கள் தந்தையின் பெயர் என்ன?''

இஷ்டதேவன் இவர் ஏன் இதைக் கேட்கிறார் என்று யோசித்த படியே ''இஸ்துவான்'' என்றான்.

''உங்கள் தாத்தாவின் பெயர்?''

தொடர்ந்து இவர் ஏன் இப்படிச் சம்பந்தமில்லாமல் தொடர்ந்து கேட்டு குழப்புகிறார் என்று இஷ்டதேவன் நினைத்துக் கொண்டான். உண்மையில் அவனுக்குத் தன் தாத்தாவின் பெயர் தெரியாது. அவனுடைய தந்தையின் இளம் வயதிலேயே அவருடைய அப்பா அதாவது அவனுடைய தாத்தா இறந்து போனதாகச் சொன்னார்கள். அவனுடைய தந்தை தன்னுடைய அப்பாவைப் பற்றி அவனிடம் சொன்னதே இல்லை. ஆகவே இப்போது அமிர்தானந்தர் கேட்ட போது அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

''என் தாத்தாவின் பெயர் தெரியாது'' என்று தயக்கத்துடன் சொன்னான்.

''என்ன உங்கள் தாத்தாவின் பெயர் தெரியாதா?'' அமிர்தானந்தர் சிரித்தபடியே கேட்டார். ''அவரைப் பார்த்தாவது இருக்கிறீர்களா?''

''ஊஹூம்'' உதட்டைப் பிதுக்கினான் இஷ்டதேவன்.

''அப்படியென்றால் உங்களுக்குத் தாத்தாவே கிடையாது என்று வைத்துக் கொள்ளலாமா?''

இந்தக் கேள்வி இஷ்டதேவனுக்கு கோபத்தைத் தந்தது.

''இதென்ன பேத்தல்? எனக்கு எப்படி தாத்தா இல்லாமல் இருந்திருக்க முடியும்? தாத்தா இல்லாவிட்டால் எனக்கு ஏது அப்பா? அப்பா இல்லாவிட்டால் நான் எப்படி உருவாகியிருக்க முடியும்? என்ன கேள்விகள் கேட்கிறீர்கள் சுவாமி?''

அமிர்தானந்தர் மறுபடியும் சிரித்தார். ''மிஸ்டர், இஷ்டதேவன் நீங்கள் இருப்பதென்றால் உங்களுக்கு அப்பா இருக்கவேண்டும். உங்கள் அப்பாவிற்கு ஒரு அப்பா இருந்திருக்க வேண்டும். அதாவது ஒரு படைப்பிற்கு ஒரு படைப்பாளி இருக்க வேண்டும். அதன் ஜீவராசிகள் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டனவே. அதற்கென்று ஒரு சிருஷ்டிகர்த்தா இருந்திருக்க வேண்டுமல்லவா?''

''என் தாத்தா இறந்து விட்டார். அப்படியென்றால் உங்கள் இறைவனும்?'' இஷ்டதேவன் அவசரமாகக் கேட்டான்.

இஷ்டதேவன் சொன்னதைக் கேட்டு அமிர்தானந்தர் பெரிதாகச் சிரித்தார்.

''இஷ்டதேவன் சிலவற்றைத் தெரிந்துகொள். இறைவன் பிறப்பில்லாதவன். ஆகவே இறப்பில்லாதவன். அவன் எங்கும் இருப்பவன். ஆனால் நம்மால் பார்க்கமுடியாதவன். அவனை அவன் செயல்களைக் கொண்டே நாம் உணரமுடியும்.''

''இதென்ன நீங்கள் சொல்வது முரண்பாடாகத் தெரிகிறது?''

''முரண்பாடில்லை. உண்மை இஷ்ட தேவா. இந்த அண்டவெளியில், நமக்குத் தெரியாமலேயே பல உயிர்கள் இருக்கின்றன என்பதற்கு ஒன்றைச் சொல்கிறேன் கேள். ஒரு தடவை விஞ்ஞானிகள் காற்றுப் புக

முடியாத ஒரு சூனியப்படுத்தப்பட்ட அறையில் ஒரு டேப்ரிகார்டரை வைத்து அதை ஒரு தானியக்கி மூலம் இயக்கினார்கள். அந்த டேப்ரிகார்டரில் இருந்த ஒலி நாடாவில் முன்னதாக எந்த ஒலியும் பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை. ஆனால் அந்த டேப்ரிகார்டரைப் பிறகு எடுத்து ஏதாவது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்தபோது அதில் என்ன மொழி, என்ன பொருள் என்று சொல்லமுடியாதபடி பல ஒலிகள்! விஞ்ஞானிகள் அதிர்ந்து போனார்கள். நமக்குப் புலப்படாத பல ஜீவன்கள் இந்த அண்டத்தில் இருக்கின்றன என்று புரிந்து கொண்டார்கள். அப்படித் தான் ஆண்டவனும். மிஸ்டர் இஷ்டதேவன் அவனைப் பார்க்க முடியாது, ஆனால் உணர முடியும்.''

''சுவாமி நீங்கள் சொல்வது சரி போலவும் தோன்றுகிறது. சரியில்லை போலவும் தோன்றுகிறது. எனக்குக் குழப்பமாக இருக்கிறதே?''

அமிர்தானந்தர் புன்னகைத்தார்.

''சரி, இப்படிச் சொல்கிறேன் உங்களுக்குப் புரிகிறதா பாருங்கள். உங்களால் மின்சாரத்தைப் பார்க்க முடியுமா?''

இஷ்டதேவன் முடியாதென்பதற்கு அறிகுறியாக தலையை இருபுறமும் அசைத்தான்.

அமிர்தானந்தர் தொடர்ந்தார்.

''ஆண்டவனை மின்சாரத்திற்கு இணையாகக் கொள்ளுங்கள். எப்படி மின்சாரத்தைப் பார்க்க முடியாதோ அதேபோல் ஆண்டவனையும் தரிசிப்பது சாத்தியமில்லை. ஆனால் எப்படி மின்சாரத்தால் இயங்கும் பொருள்களைக் கொண்டு அவற்றின் இயக்கம் மின்சாரத்தால் என்கிறோமோ, அதேபோல் ஆண்டவனால் இயக்கப்படும் பலவும், எங்களை இயக்குபவன் ஒருவன் என உண்மையைச் சுட்டிக் காட்டுபவை. மின்சாரத்தால் இயங்கும் பல பொருள்களில் எவ்வளவு வேற்றுமைப் பார்த்திருக்கிறார்களா? இஸ்திரிப்பெட்டி சூட்டைத் தருகிறது. குளிர்பதனப் பெட்டி பெரும் குளிர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஃபேன் காற்றைத் தருகிறது. அதுவே எக்ஸாஸ்ட் பேன் காற்றை அப்புறப் படுத்துகிறது.

அமிர்தானந்தர் பேசுவதை நிறுத்திவிட்டு, அருகிலிருந்த சொம்பிலிருந்து நீரைக் குடித்தார். இஷ்டதேவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவன் கண்களில் மீண்டும் ஆர்வம் தெரிந்தது.

அமிர்தானந்தர் தொடர்ந்தார். ''நீ ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு இப்போது பதில் சொல்கிறேன் கேள். இதோ பார், உனக்குத் தெரிந்திருக்கும். மின்சாரத்தில் பாசிடிவ், நெகடிவ் என்று இணைப்புகள் தேவை. அவற்றில் ஒன்றுடன் மட்டும் மின்சாரம் ஏற்பட முடியாது. இந்த பாசிடிவ், நெகடிவ் என்பவை இரு குறியீடுகளே. இரு பெயர்கள் அவ்வளவே. உலகில் ஆண்டவன் படைத்த ஆணும், பெண்ணும் இவ்விரு இணைப்புகள் போன்றவர்களே! மனிதவர்க்கம் வளர இருவரும் தேவை. இஷ்டதேவன் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். விஞ்ஞான ரீதியாகவே ஒரு ஆணில் பெண்ணும், பெண்ணில் ஆணும் இருக்கிறார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதைத் தான் தத்துவஞானிகள் ஆண் இனத்தைச் சிவன் என்றும் பெண்ணை சக்தியென்றும் இங்கே குறிப்பிடுகிறார்கள். எப்படி பாசிடிவ், நெகடிவ் இரண்டும் அவசியம் என்று சொல்லப்படுகிறதோ, அதே போல இங்கே சக்தியில்லையெனில் சிவனில்லை என்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் அர்த்தநாரி என்ற கடவுள் உருவகம்.''

அமிர்தானந்தர் பேசுவதை நிறுத்திவிட்டு இஷ்டதேவன் முகத்தை உன் கேள்விக்கு பதில் கிடைத்து விட்டதா என்பது போல் பார்த்தார்.

இஷ்டதேவன் முகத்தில் ஒரு ஒளி, தெளிவு, பிரகாசம்.

''சொல்லுங்கள் சுவாமி! இதுவரை நான் பலரிடம் கேட்டு விடை காணாததை உங்களிடம் கேட்டுத் தெளிவு பெற்றேன். மேலும் சொல்லுங்கள்'' ஆர்வத்துடன் கேட்டான் அவன்.

''மேலும் சொல்வதற்கு ஒன்றுமில்லை.'' என்றார் அமிர்தானந்தர்.

இஷ்டதேவன் சிறிது நேரம் ஏமாற்றத்துடன் மௌனம் காத்தான். பிறகு ''சுவாமி, என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்வீர்களா?'' பணிவுடன் கேட்டான்.

அமிர்தானந்தர் பெரிதாகப் பலமாகச் சிரித்தார்.

''இதோ பார், இஷ்டதேவன். நான் தனி மனிதன். அப்படித் தான் இருக்க விரும்புகிறேன். எனக்குத் தெரிந்ததை மற்றவருக்குச் சொல்லி வருகிறேன். இதை விடுத்து நான் எனக்கென்று சீடர்களை வைத்துக் கொண்டு, ஆசிரமம் அமைத்தேனே ஆனால் அந்த ஆசிரமத்தை எப்படி நடத்துவது என்றே எனக்குப் பெரும் கவலை ஏற்பட்டுவிடும். அப்போது எனக்குத் தெய்வ சிந்தனை குறைந்து, எனக்கும் ஆண்டவனுக்கும் இடைவெளி அதிகரித்து விடும்.''

''அப்படி என்றால் என்னை உங்களுடன் சேர்த்துக் கொள்ள மாட்டீர்களா?'' ஏக்கத்துடனும் வருத்தத்துடனும் கேட்டான் இஷ்டதேவன்.

★★★

# அரவு அளித்த தீர்ப்பு

- புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ. பிஎட்.

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களுள் அரசர்களாக இருந்து, திருமாலிடத்தில் ஆழ்ந்த பக்தி கொண்டு, பக்தியால் ஆழங்கால் பட்டு, ஆழ்வார்களாக மாறியவர்கள் குலசேகரப்பெருமாளும், திருமங்கை மன்னனும் ஆவர். இவர்களில் முதலாமவர் குலசேகராழ்வார் ஆவார்.

இன்று கேரளம் என வழங்கும் பண்டைக்கால சேர நாட்டில், கோழிக்கோடு எனும் ஊரைத் தலை நகரமாகக் கொண்டு ஆண்டு வந்த திடவிருதன் என்னும் மன்னனுக்கு திருமகனாய் பராபவ ஆண்டு, மாசித் திங்கள் புனர்பூச நன்னாளில் அவதரித்தார். சேரர் குலம் விளங்க ஆண் மகவாகப் பிறந்த காரணத்தினால் குலசேகரன் என்று பெயர் சூட்டப்பட்டார். திருமாலின் கௌத்துவ மணியின் அம்சமாகவும், முளைக்கும் போதே நறுமணத்துடன் விளங்கும் திருத்துழாய் செடியைப் போலவும், கருவிலே திருவுடையராகவும் இளமை முதலே பக்தியில் ஆழ்ந்தவராக விளங்கினார்.

''மாசிப்புனர் பூசம் காண்மினின்று மண்ணுலகீர்....
குலசேகரன் பிறப்பால் நல்லவர்கள்
கொண்டாடும் நாள்''

(உபதேசரத்தின மலை)

குலசேகரர் இளமையிலேயே சிறந்த கல்வியையும் படைக்கலப் பயிற்சியையும் ஒருங்கே பெற்று, அறிவுடைய வீரனாகத் திகழ்ந்தார். இவரது தந்தை இவருக்கு முடிசூட்டி, அரசனாக்கினார். இவர் சோழ, பாண்டிய நாடுகளைப் போரில் வென்று கொல்லி காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன் குலசேகரன் என்னும் சிறப்புப் பெயர்களையும் பெற்றார்.

இவரது ஆட்சியில் நீதி நிலைத்தது. அறக் கடவுள் நான்கு கால்களாலும் நடந்தார். நாடு நான்கு வகை வளங்களும் பெற்று, தெய்வபக்தி தழைத் தோங்கியது. மழைவளம் பெருகியது, நெல்விளைச்சல் மிகுந்தது. மக்கள் பசியும், பிணியும் கள்வர் பயமும் நீங்கி அமைதியான இனிய நல்வாழ்வு வாழ்ந்தனர். பசுக்கள் மிகுதியான பாலைச் சொரிந்தன. மொத்தத்தில் குலசேகரன் ஆட்சி ''இராம இராஜ்ஜியமாக'' விளங்கியது.

குலசேகரருக்குத் தன்பால் பக்திக் கொள்ளும் படியான எண்ணத்தைத் தோற்றுவித்தார் திருமால். குலசேகரர் முழு முதற் கடவுள் யார் என, பல மெய்யறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்தார். திருமாலே முழு முதற் கடவுள் என்பதை உணர்ந்தார். இராமாயணம், பாகவதம் போன்ற தெய்வீக நூல்களை ஐயமுறக் கற்றார். இராம பக்தியில் அதிக ஈடுபாடு கொண்டார். திருமாலை வணங்கினார். திருமாலை ஒரு நாள் வணங்குவதைவிட திருமால் அடியார்களை ஒருமணி நேரம் வணங்கி உபசரித்தால் பெரிதும் திருமால் விரும்புவார் என்பதை உணர்ந்தார். திருமாலடியார்களைப் போற்றி உபசரித்தார். இவரது பக்தியைக் கேட்ட, நாடெங்குமுள்ள திருமாலடியவர்கள் ''பழுமரத்தை நாடிவரும் பறவையைப் போல'' எண்ணிலடங்கா அளவில் குலசேகரர் அரண்மனையை அடைந்தனர். குலசேகரரும் முகமும் மனமும் மலர்ந்து திருமால் அடியவர்களுக்கு வேண்டுவன அளித்து, வணங்கிப் போற்றி வந்தார்.

''அடியார் தங்கள் இன்பமிகு பெருங்கூட்டம்
கண்டு இன்பமுற்று'' வாழ்ந்து வந்தார்.

குலசேகரர் திருமாலடியவர்களை உபசரிப்பதிலும் வணங்குவதிலும் அதிக கவனம் செலுத்தினார். நிலையற்ற அரசாட்சியில் கவனம் செலுத்தவில்லை. இதனை அமைச்சர்கள் சுட்டிக் காட்டினர். அதற்கு குலசேகரர் ''திருமால் அடிசூடும் அரசையல்லாமல் அரசாக எண்ணேன் மற்றரசு தானே'' எனக் கூறினார். அவர் பதிலில் திருப்தி அடையாத அமைச்சர்கள் சமயம் பார்த்திருந்தனர். திருமாலடியார்கள் மீது பழி சுமத்தி அவர்களை வெளியேற்ற திட்டமிட்டிருந்தனர்.

ஸ்ரீராம நவமித் திருநாள் வந்தது. குலசேகரர் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தார். ஸ்ரீராம பிரானுக்குத் தன் அரண்மனையில் திருமஞ்சனம் (நீராட்டு) நடந்து கொண்டிருந்தது. அனைவரும் திருமஞ்சன வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். இராமபிரானின் ஆபரணங்கள் களைந்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் விலையுயர்ந்த இரத்தின மாலையினை, அமைச்சர்கள் எடுத்து ஒளித்து வைத்தனர். திருமஞ்சனம் முடிந்து ஆபரணங்களை அணிவிக்கத் தொடங்கினர். இரத்தின மாலையைக் காணாமல் அரசன் முதலாக அனைவரும் திகைத்தனர். அமைச்சர்கள் இந்த

இரத்தின மாலையைத் திருமாலடியவர்கள் தாம் எடுத்திருப்பர் என்று பழி கூறினர்.

இதைக்கேட்ட குலசேகரர் காதுகளைப் பொத்திக் கொண்டார். திருமாலடியவர்கள் இத்தகைய இழிச்செயலைச் செய்ய மாட்டார்கள் என வாதிட்டார். ''என்னடியார் (திருமாடியார்) அது செய்யார், செய்தாரேல் நன்று செய்வார்'' என்று கூறினார். அமைச்சர்களுக்கும், அரசனுக்கும் வாதம் முற்றியது. இறுதியாகக் குலசேகரர் ஒரு சோதனையைச் செய்ய உறுதி பூண்டார். அதை நிரூபிக்க, கடும் விஷம் கொண்ட நாகப் பாம்பினை ஓர் குடத்தில் இட்டுக் கொண்டு வரும்படிச் செய்தார். திருமாலடியவர்களின் தூய்மையை உறுதிப்படுத்தவும் அவர்களிடம் தமக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தவும் அக்குடத்தில் கையிடவும் உறுதி பூண்டார். திருமாலடியார்கள் மாலையை எடுத்திருப்பின் பாம்பு என்னைத் தீண்டட்டும் என்று கூறி குடத்தில் கையிட்டார்.

''ஆரம்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று,
அவர்களுக்கே
வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்
மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோல் கொல்லி காவலன்
வில்லவர்கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே''

ஆனால் பாம்பு குலசேகரரைத் தீண்டாமல் குடத்தினின்றும் வெளிவந்து அவரது கைகளை முத்தமிட்டு அமைந்தது. இதைக் கண்ட அனைவரும் பேராச்சரியமடைந்தனர்.

இதைக் கண்ட அமைச்சர்கள் நடுநடுங்கினர். செய்வது என்னதென்று அறியாமல் திகைத்தனர். குலசேகரிடம் உண்மையைக் கூறி, தங்கள் தீச்செயலுக்காக வருத்தம் தெரிவித்து மன்னிப்பு வேண்டினர். குலசேகரர், பழிகூறிய பாவத்திற்கு திருமாலடியவர்கள் பாதங்களில் விழுந்து வணங்கும்படிச் செய்தார். இனி இத்தகைய பழிச் செயலை செய்யாமல் இருக்கும்படி வேண்டினார். திருமாலடியவர்களைப் போற்றி உபசரிக்கும்படிக் கூறினார். அமைச்சர்களும் தங்கள் தவறை உணர்ந்து வாக்குறுதியளித்தனர். திருமால் அடியவர்களைப் போற்றிப் பணிந்தனர்.

''திருமால் அடியார்களை பூசிக்க நோற்றோமே''

என்று மகிழ்ந்தனர். இதனால் குலசேகரர் ''குடப்பாம்பில் கையிட்ட கோன்'' என்று போற்றப்பட்டார். இப்படி பகுத்தறிவு இல்லாத மூன்றறிவுடைய ஊர்

பாடியாய்க் கிடந்து உன்
பவள வாய் காண்பேனே!

—குலசேகரர்

வனவாகிய பாம்பின் மூலம் இறைவன் அளித்த தீர்ப்பைக் கண்ட அனைவரும் வியந்து நெஞ்சம் நெகிழ்ந்தனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த குலசேகரர் வரலாற்றால், திருமாலடியர்கள் இழிச்செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்பதும், செய்யும் செயலை நல்ல செயலாகவே செய்வர் என்பதும், திருமாலடியார்களை எல்லா உயிரும் நேசிக்கும் என்பதும் புலனாகின்றது. மற்றும் பாம்பே சரியான தீர்ப்பு அளித்ததை உணர்ந்து, பகுத்தறிவு பெற்ற மானிடர்களாகிய நாம் தவறாத நீதி வழங்க வேண்டும் என்பதும் இந்நிகழ்ச்சியால் அறிவிக்கப்படுகிறது.

''சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி''

(குறள்)

அஞ்சனமா மலைப்பிறவி யாதரித்தோன் வாழியே!
அணியரங்கர் மணத்தூணையடைந்துய்ந்தோன்
வாழியே!
வஞ்சிநகரம் தன்னில் வாழவந்தோன் வாழியே!
மாசிதன்னிற் புனர்பூசம் வந்துதித்தான்
வாழியே!
அஞ்சலெனக் குடப்பாம்பில் அங்கையிட்டான்
வாழியே!
அநவரதம் இராமகதை யருளுமவன் வாழியே!
செஞ்சொல் மொழி நூற்றஞ்சும் செப்பினான்
வாழியே!
சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள்
வாழியே!

குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்

★★★

# கூர நாராயண ஜீயர்

- திருமதி இந்திரா ஆரா அமுதன், திருவரங்கம்

விசிஷ்ட அத்வைத மதத்தை ஸ்தாபித்த ஸ்ரீ உடையவரின் தலையாய சீடர்களில் ஒருவர் கூரத் தாழ்வான். தன்னுடைய குருவுக்காக தன் கண்களையே கொடுத்து குருவைக் காப்பாற்றியவர். அப்படிப்பட்டவர் திருவடிகளில் சேவித்து சன்யாசம் பெற்றவர்தான் கூர நாராயண ஜீயர் என்று சொல்லப்படுகிற இந்த மஹான். இவர் பெரிய மாந்தரீகர். சுதர்ஸன மந்த்ர உபாஸனை செய்தவர். பெரிய பெருமாள் என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கநாதரையே எத்தனையோ ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றியிருக்கிறார். அந்த அற்புத செயல்களைச் சற்று பார்ப்போம்.

ஸ்ரீரங்கப்பட்டணத்து மன்னனுடைய ஏவலால் மந்திர, தந்திரங்களின் உதவியால் பெரிய பெருமானுடைய சௌந்தர்யத்தை ஸ்ரீரங்கப்பட்டண பெருமாளுக்கு ஆவாஹனம் செய்து கொண்டு போகுமாறு வல்லமையான ஒரு மந்திரவாதி வந்தாராம். வந்தவர் தன்னை யாரும் பார்க்க முடியாதவாறு மாயம் செய்து கண்களில் மைதீட்டி தன்னை மறைத்துக் கொண்டு, பலிபீடத்தில் இடப்படும் ப்ரசாதத்தை சாப்பிட்டுவிட்டு, ஒவ்வொரு நாளும் பெருமாளுடைய அழகை ஒரு குடத்தில் ஆவாஹனம் செய்தபடியே இருந்து வந்தார். உள்ளூர்வாசிகள் பெருமாளை தினம் கண்டு அழகில் மயங்கியவர்களாக இருந்ததால், சில காலமாக பெருமாளுடைய திருமுகத்தில் ப்ரகாசமோ அல்லது தேஜஸோ குறைந்தமாதிரி இருக்கிறதே என்று ஒருவருக்கு ஒருவர் பேசியபடியே ஊர் பூரா பரவியது இந்த விஷயம்.

இந்த செய்தி கூரநாராயண ஜீயருக்கும் தெரிந்ததால், என்ன மாயம் நடக்கிறது என்று பார்க்க அவர் விரும்பினானர். அவருக்கும் மாந்தரீகம், மாயக்கலை எல்லாம் தெரியுமாதலால் பலிபீடத்தில் ப்ரசாதம் காணாமல் போவது தெரிந்தது. அதை அபகரிப்பவரைக் கண்டு பிடிக்க ஒரு யுக்தி செய்தார். நிறைய கடுகு, மிளகு பொடித்து பலிப்ரசாதத்தில் கலந்து வைக்குமாறு அவர் கோயில் நிர்வாகிகளிடம் கூறி ஒரு நாள் வைக்கச் சொல்லிக் கண்காணித்தார். இவை கலந்திருப்பதை அறியாத மாயாவி ப்ரசாதத்தை உண்டவுடன் புரைக்கு ஏறி, காரம் தாங்காமல் விக்கல் ஏற்பட்டு கண்ணீர் வந்தது அவ னுடைய கண்களில், கண்ணீர் வந்தவுடன் கண்களில் போட்டிருந்த மையும் நீரில் கரைந்தவுடன், ஆளினுடைய உருவம் வெளிப்பட்டது. கூர நாராயண ஜீயரும் அவனைப் பிடித்து விசாரித்து அவனை விடுவித்துவிட்டு, பெருமாளை முன்பிருந்த நிலைக்கு திரும்பி வருமாறு தன்னுடைய மந்திர சக்தியால் காப்பாற்றினார். பெருமாளையே காப்பாற்றிய மகா வீரர் ஆவார்.

முன்பெல்லாம் பெருமாளின் உத்சவம் காவிரியில்தான் நடைபெற்றுவந்தது. திருப்பள்ளி ஓடத்தில் பெருமாள் எழுந்தருளியவுடன் தெப்பம் நடைபெறும் பொழுது க்ஷுத்ர தேவதையின் மந்திரத்தால் ஆட்கொள்ளப்பட்ட காவிரி ப்ரவாஹம் ஆக எடுக்க ஆரம்பித்து தெப்பத்துடன் பெருமாளை அடித்துச் செல்லப் பட்டதை அறிந்த கூரநாராயண ஜீயர் தன் விரலில் அணிந்திருந்த பவித்திரத்தை வலப்புறமாக திருப்பினாராம். உடனே தெப்பம் கரை சேர்ந்து பெருமாளும் உபய நாச்சிமார்களும் தீங்கில்லாமல் கோயிலுக்கு எழுந்தருளப்பட்டார்களாம், அதற்கப்புறம் இத்தகைய தீங்குகள் நேரக்கூடாதென்று தெப்பக்குளம் கட்டுவித்தாராம் மேலூரில், இந்த மேலூரில் இருக்கும் குளத்தில் தான் இன்றைக்கும் தெப்ப உத்ஸவம் நடைபெற்று வருகிறது. இதுபோல க்ஷுத்ர தேவதைகளால் தீங்கு வரக்கூடாது என்பதற்காகவும் ஸ்ரீரங்கத்திற்கும், ரங்க விமானத்திற்கும் என்றைக்கும் பாதுகாப்பு அவசியம் என்பதையும் இவர் உணர்ந்து ராயர் கோபுரத்தில் (தற்போது 44-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரால் அதற்கு ஆசியாவிலேயே உள்ள மிகப்பெரிய கோபுரமாக 236 உயரத்தில் கட்டப்பட்டுள்ள ராஜகோபுரம்) எந்திரம் - அக்ஷரம் பிரதிஷ்டை செய்து மேற்படி தேவதைக்காக திருவேங்கமுடையானை முனியப்பன் என்ற திருநாமத்துடனும் எல்லைத் தெய்வமாகவும், வடபுறத்திலும் ரக்ஷைக்காக ஒரு க்ஷுத்ர தேவதையையும், ஸ்தாபித்த பெரிய மகான் இவர் ஆகும்.

ஆலயத்தில் திருவாய்மொழி ஓதி வந்த அடியார் ஒருவர் கண்ட மாலை என்ற வியாதியால் கஷ்டப்படுவதை அறிந்த ஜீயர் ''சுதர்ஸன சதகம்'' என்ற ஸ்லோகத்தைச் சொல்லி சுதர்ஸன ஆழ்வார் மூலம் அவருடைய நோயை முற்றிலும் குணப்படுத்திய தீரர் ஆவார்.

# அன்னதானத் திட்டம் வெல்க வெல்கவே!

– முனைவர் இரா. செல்வகணபதி

*அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்!*

*திருக்கோயில் சித்ரபானு - வைகாசி இதழில் தாங்கள் வெளியிட்டிருக்கும், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் 'அன்னதானம்' என்ற தலைப்பிட்ட கட்டுரையைப் படித்துப் பூரித்தேன். தக்க நேரத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒரு தகுதியான கட்டுரை இது.*

*வேத ஆகமங்களும், சைவத்திருமுறைகளும் வற்புறுத்திய அன்னதானத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த நேரத்தில், அன்னதானத்தின் சிறப்பினையும், அதனைச் செய்வார் அடையும் பேறுகளையும், சமய வாழ்வில் 'யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி' என்ற உன்னதக் கோட்பாட்டின் உயர்ப்பினையும் கட்டுரை அழகுறப் படம்பிடித்துக் காட்டுகிறது.*

*63 ஆலயங்களில் பசித்த வயிறு நிறைந்து நெஞ்சார வாழ்த்தும் வாழ்த்துக்களில் சைவம் மீண்டும் அதன் கோட்பாடுகளில் தலை நிமிர்கிறது. அன்னதானத் திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழக முதல்வருக்கும், அதை உள்ளவாறு நடைமுறைப்படுத்தும் அறநிலையத்துறையினருக்கும், அன்னதானச் சிறப்புரைக்கும் கருத்துக் கருவூலத்தைத் தேர்ந்து வெளிப்படுத்திய தங்களுக்கும் கோடானுகோடி சைவத் தமிழ் மக்களின் சார்பில் பாராட்டுரைத்து மகிழ்கிறேன்.*

*அன்பன்*

*முனைவர் இரா. செல்வகணபதி*
*கரிகாலன் தெரு,*
*கலாசேத்திரா காலனி,*
*சென்னை - 600 090.*

*பெறுநர்*

*ஆசிரியர் அவர்கள்,*
*திருக்கோயில்*
*இ.ச.அ. ஆட்சித்துறை*
*சென்னை - 34.*

*நம்பிக்கையுடன் அவர் அருளிய இந்த சதகத்தைப் படித்தால் சங்கரத்தாழ்வானின் பரிபூர்ண அருள் கிட்டும் என்பது இன்றைக்கும் உள்ள நம்பிக்கை.*

*நிறைய சன்னிதிகள் கட்டுவித்தார். சக்கரத் தாழ்வானுக்கு எதிராக பார்த்த சாரதி சன்னிதியும், முன்பு ஆண்டாள் உக்ரமாக இருந்ததை அறிந்து அவருக்கு எதிராக விட்டால் கிருஷ்ணன் சந்நிதியையும் ஏற் படுத்திய பெருமை மிக்கவர் செய்த சேவைகள் எண் ணில் அடங்காதது.*


*இவரது பக்தியைக் கண்டவர்கள் இவருக்கு ''ஸ்ரீரங்கநாராயண ஜீயர்'' என்ற திருநாமத்தை சூட்டி னார்கள். இவர் ஜீயர்களில் பிரதானராக இருந்து சன்னிதி கைங்கர்யங்களை நிர்வகித்து வந்தார்.*

*பிள்ளை லோகாச்சாரியார் காலத்தில் இவர் வாழ்ந்தார். கந்தாடையாண்டான் பேரரான ''பெரிய ஆயி'' என்பவர் உடையவரின் திருவாழி மோதிரத் தையும் கோயிலுக்கு உரிய எல்லா உடமைகளை யும் இவருக்கு அனுக்ரஹிக்குமாறு பண்ணினார்.*

*இத்தகைய கார்ப்புகள் செய்த மகான் வாழ்ந்த ஸ்ரீரங்கத்தில் நாமும் வாழ்வதற்கு பாக்யம் செய்திருக் கிறோம் என்று பெருமை கொள்வோமாக.*


★★★



திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 28.5.2002 அன்று திருஞானசம்பந்தர் இசை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறையின் கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள், செந்தமிழ் வாரிதி முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்களின் தலைமையின் கீழ் ''திருஞானசம்பந்தரும் அற்புதங்களும்'' எனும் தலைப்பில் கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ''திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், பேராசிரியர் முனைவர் பாலறாவாயன், கலைமாமணி கவிஞர் மதிவண்ணன், புலவர் மா. இராமலிங்கம், வழக்கறிஞர் திருமதி கே. சுமதி ஆகியோர் திருஞான சம்பந்தரின் பற்பல அற்புதங்களை விவரித்து உரையாற்றினர். காஞ்சிபுரம் உதவி ஆணையாளர் திருமிகு பி. வாசுநாதன், எம்.ஏ., பி.எல் அவர்களும், திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு வ. ச. மறைமலை அவர்களும் இவ்விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்புறச் செய்து இருந்தார்கள். பேரூராட்சிமன்றத் தலைவர் வீ. வேலாயுதம் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

பதிவு எண். T.N/CHIEF PMG/515/2002/WPP 283





திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்கு சுமார் 4 கோடி ரூபாய்கள் திட்டமதிப்பீட்டில் திருப்பணிகள் சிறப்புற நிறைவேற்றப்பட்டு 27.6.2002 அன்று திருக்குட நீராட்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற ஆவன செய்யப்பட்டு வருகின்றது. இத்திருக்குட நீராட்டுவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களும், அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.ரா. சீனிவாசன், இ.ஆ.ப. மற்றும் அறநிலையத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.